# விவசாயிகளும் நுகர்வோர்களே!



விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் நுகர்வோர் பாதுகாப்பு

சட்டத்தை பயன்படுத்துவது எப்படி

## பயிற்சி கையேடு


வெளியீடு:

**தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம்**

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

எழிலகம் சென்னை - 5.

தொலைபேசி : 044-28583222, 28583422

இணையதளம் : www.consumer.tn.gov.in

மின்அஞ்சல் : consumer@tn.nic.in

## தமிழ்நாடு அரசு
## உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# மாநில நுகர்வோர் சேவை மையம்

**"ஒரு பொருளையோ அல்லது சேவையையோ பணம் செலுத்தி பெறும் அனைவரும் நுகர்வோரே"**

**நுகர்வோர் கவனத்திற்கு.......**

- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986ன்படி நுகர்வோர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பாக அறிய வேண்டுமா ?
- நீங்கள் வாங்கிய பொருளில் தரக்குறைவோ அல்லது பெற்ற சேவையில் சேவைக் குறைபாடோ உள்ளதா ?
- நீங்கள் வாங்கிய பொருட்கள் பழுது ஏற்படும் போது விற்பனையாளர் உத்தரவாதத்தின்படி அதனை சரி செய்து தர மறுக்கப்படுகிறதா ?
- பொருளின் மீது அச்சிடப்பட்ட விலையினை விட கூடுதலாக பணம் விற்பனையாளரால் வசூலிக்கப்படுகிறதா ?
- காலாவதியான, தரம் குறைந்த, கலப்படம் செய்யப்பட்ட உணவு பொருட்களோ மருந்து பொருட்களோ கடைகளில் விற்கப்படுகிறதா ?
- மல்ட்டி லெவல் மார்க்கெட்டிங் போன்ற நேர்மையற்ற வியாபார முறைகளினால் பாதிப்பு அடைந்துள்ளீர்களா ?
- தரமற்ற விதைகள், உரங்கள், பூச்சி மருந்து ஆகியவற்றால் பாதிப்படைந்துள்ளீர்களா ?

**- புகார் அளிக்க அல்லது ஆலோசனை பெற அணுகுவீர்!!!**

| | |
|---|---|
| தொலைபேசி எண் | **044-28592828** |
| தொலைபேசி சேவை உதவியாளரை தொடர்பு கொள்ளும் நேரம் | அனைத்து அரசு பணி நாட்களிலும் காலை 9-30 முதல் மாலை 6-00 முடிய |
| நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான முன்பதிவு செய்யப்பட்ட (IVRS) தகவல்கள் அறிய | வாரத்தின் அனைத்து நாட்களும் எந்நேரமும் (24 Hours x 7 Days) |
| மின்அஞ்சல் (இ.மெயில்) மூலம் புகார் அனுப்பிட | consumer@tn.gov.in |
| புகார் பதிவு செய்ய இணைய தள முகவரி | www.consumer.tn.gov.in |
| தபாலில் புகார் அனுப்ப முகவரி | மாநில நுகர்வோர் சேவை மையம்<br>ஆணையரகம், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,<br>சேப்பாக்கம், சென்னை - 600 005. |

வெளியீடு : தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம், (TANSSCOPE), எழிலகம், சென்னை - 5.

# விவசாயிகளும் – நுகர்வோர்களே!

விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் நுகர்வோர்
பாதுகாப்பு சட்டத்தை பயன்படுத்துவது எப்படி

# பயிற்சி கையேடு

வெளியீடு

தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம்
உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.
www.consumer.tn.gov.in, e-mail: consumer@tn.nic.in
தொலைபேசி 044 – 2859 2255, 2858 3139, 2858 3222 பேக்ஸ் : 2851 0731

தொகுப்பு
தமிழ்நாடு நுகர்வோர் கூட்டமைப்பு, கடலூர்
தொலைபேசி 04142 230978 & 220764 www.consumerwecan.org
e-mail: consumernizam@yahoo.co.in

# முகவுரை

“கிராமங்களே இந்தியாவின் முதுகெலும்பு” என்றார் மகாத்மா காந்தியடிகள். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அந்நாட்டின் கிராமங்களின் வளர்ச்சியிலேயே உள்ளது. நமது நாடு வேளாண்மை தொழிலைப் பிரதானமாக கொண்டுள்ளதால், நுகர்வோர் எனும் ஒரு குடையின் கீழ், விவசாயிகளும் அடங்குவர் என்பதனைப் பிரதிபலிக்கும் முகமாக, நுகர்வோரின் உரிமைகள் மற்றும் கடமைகள் விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் பயன்பாடுடையனவாக இருக்கின்றன என்பதனை, அனைத்து விவசாயக் குழுக்கள் மற்றும் விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையினால் பயிற்சி வகுப்புகள் நடத்திட திட்டமிட்டு, அதற்காக இந்த பயிற்சி கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நூலினை வடிவமைக்க உதவிய தமிழ்நாடு நுகர்வோர் கூட்டமைப்பு, கடலூர், தன்னார்வ அமைப்பின் நிர்வாக செயலாளர் திரு.எம். நிஜாமுதீன், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு. சுதாகர் ஆகியோருக்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

“சுழன்றும் ஏரப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை”

என்ற பொய்யாமொழிப் புலவரின் வார்த்தைகள் பொய்க்கவில்லை என்பதே மெய். விவசாயிகளும் நுகர்வோர்களே என்ற இப்பயிற்சி கையேட்டினை படித்து, அதன் வழி நடந்து பயன் பெறுவீர்கள் என்ற நம்பிக்கையுடனும் வாழ்த்துக்களுடனும்....

க.ராஜாராமன், இ.ஆ.ப.,
ஆணையாளர்

# பொருளடக்கம்


முகவுரை

முன்னுரை

நுகர்வோர் என்பவர் யார்? அவரது உரிமைகள், கடமைகள் என்னென்ன?

உணவு பாதுகாப்பின் அவசியம்

விவசாயி, விலைவாசி, பசுமைப்புரட்சி

விவசாயம் சார்ந்த சட்டங்கள்

விவசாயத்தில் இரசாயனப்பொருட்கள் பயன்படுத்தலின் விளைவுகள்

உழவர் சந்தை

விவசாய காப்பீடுத் திட்டம்

மின்நுகர்வும், விவசாயிகளின் உரிமைகளும்

விவசாயியும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும்

விவசாயம் சார்ந்த நுகர்வோர் குறைதீர் மன்ற வழக்குகள் / தீர்ப்புகள்

கிராம ஊராட்சியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005.

இணைப்பு :

அ. தடைசெய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகள்

ஆ. தமிழ்நாட்டில் உள்ள தரபரிசோதனை ஆய்வகங்கள்

இ. மாவட்ட விவசாய அலுவலகங்கள் / தொலைபேசி எண்

# பகுதி - I

# நுகர்வோர் என்பவர் யார்? அவரது உரிமைகள், கடமைகள் என்னென்ன?



**நுகர்வோர் என்பவர் யார்?**



பொருட்களையோ அல்லது சேவைகளையோ – விலை கொடுத்தோ. வாக்குறுதி கொடுத்தோ வாங்குபவரை நுகர்வோர் என்கிறோம்.

வணிக மற்றும் வியாபார நோக்குடன் ஒரு பொருளினை அல்லது சேவையினை பணம் செலுத்தி பெறுபவர் நுகர்வோர் ஆகமாட்டார், ஆனால் சிறு வியாபாரத்தை மட்டுமே நம்பி பொருட்கள் வாங்கி விற்று பிழைப்பு நடத்துபவர் நுகர்வோர் ஆகிறார்.

**நுகர்வோர் உரிமைகள் யாவை?**

**பாதுகாப்பு உரிமை**

உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருட்கள், உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் சேவைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.

**தகவல் பெறும் உரிமை**




ஏமாற்றும் மற்றும் தவறான தூண்டுதலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள. தானாகவே. அறிவுபூர்வமாக முடிவு எடுக்க உதவும் உரிமை,

**தேர்ந்தெடுக்கும் உரிமை**

தனக்குத் தேவையான பொருள் அல்லது சேவைகளை சுதந்திரமாக தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை,

**முறையிடும் உரிமை**

தன்னுடைய கருத்துக்களையும். அனுபவங்கள் மற்றும் குறைகளையும் தக்க இடத்தில் எடுத்துரைக்க. எளிதில் அணுகக்கூடிய உரிமை,

**குறைதீர்க்கும் உரிமை**

தரமற்ற பொருட்கள் அல்லது திருப்தியற்ற சேவைகள் காரணமாக ஏற்படும் இழப்புகளுக்கு நியாயமாக நஷ்ட ஈடு பெறுவதற்கான விழிப்புணர்வு மற்றும் உரிமை,

**நுகர்வோர் கல்விக்கான உரிமை**



விழிப்படைந்த நுகர்வோராக இருப்பதற்கு தேவையான அறிவையும். திறமையையும் பெறும் உரிமை மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி மூலம் உரிமைகளை அறிந்து கொள்ளுதல்

**தூய்மையான நலம் பயக்கும் சுற்றுச்சூழலுக்கான உரிமை**

வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தூய்மையான நலம் பயக்கும் சுற்றுச் சூழலுக்கான உரிமை,

**அடிப்படை தேவைகளுக்கான உரிமை**

உணவு. உடை. இருப்பிடம். உடல்நலப் பாதுகாப்பு. கழிவு நீர் அகற்றுதல் ஆகிய முக்கிய அடிப்படை பொருட்கள் மற்றும் சேவைகள் அனைத்தையும் எளிதில் அணுகக்கூடிய உரிமை,

**நுகர்வோர் கடமைகள் யாவை?**



- விழிப்புணர்வோடு இருத்தல்
- ஈடுபாட்டுடன் இருத்தல்
- தேவைக்கு அதிகமான நுகர்வை தவிர்த்தல்
- தவறு செய்யும் உற்பத்தியாளர்கள்–வணிகர்கள் பற்றி புகார் செய்தல்

**நுகர்வோர் கடமைகள் யாவை?**



- பொருட்களையும் சேவைகளையும் முறையாக பயன்படுத்தல்
- சுற்றுச்சூழல் குறித்து பொறுப்புணர்ச்சி
- கூட்டு முயற்சி
- அங்காடிக்குச் செல்வதற்கு முன்பு தேவையை பட்டியலிட வேண்டும்
- பொருட்களின் ரகங்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்,
- விற்பனையாளர்களின் வற்புறுத்தலை எதிர்க்க வேண்டும்,
- ரசீதுகள். உத்திரவாதங்கள். தகவல் அறிக்கைகள் அனைத்தையும் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- பிரச்சனை என்று வந்த உடனேயே அதனை விற்பனையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்,
- உத்திரவாத அட்டையில் விற்பனையாளரின் முத்திரை மற்றும் கையொப்பத்தைப் பெற வேண்டும்,
- பொருட்களுக்காக வாங்காமல். வாழ்க்கைக்குத் தேவையான பொருள் மட்டும் வாங்க வேண்டும்,

**நுகர்வோர் உரிமையை பாதுகாக்க ஏதேனும் சட்டம் உள்ளதா?**

ஆம். நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம். 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது,



**மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் / மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் சிறப்பு அம்சங்கள் யாவை?**

- எளிய வழக்காடு முறைகள்
- வழக்கறிஞர் தேவையில்லை
- நாமே வாதிடலாம்
- பதிவு தபாலில் புகாரை அனுப்பலாம்
- பதிவு செய்யப்பட்ட நுகர்வோர் சங்கங்கள் நுகர்வோர்கள் சார்பில் புகார்களை அளித்து வழக்கு தொடுக்கலாம்
- வழக்குகள் பதிவு செய்து வழக்கு நடத்துவதில் குறைந்த செலவு
- நஷ்ட ஈடு பெற சட்டத்தில் வழிவகை



# உணவு பாதுகாப்பின் அவசியம்

நுகர்வோரின் பார்வையில் உணவு பாதுகாப்பு என்பது குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் நல்ல தரத்தில், பாதுகாப்புடன், சமூக ரீதியாக ஒத்துக்கொள்ளக்கூடிய மற்றும் உரிய அளவிலான உணவை உறுதி செய்வதாகும்.

**உணவு பாதுகாப்பு என்பது என்ன?**

○ தயாரிக்கப்படும் போதும் உட்கொள்ளும் போதும் உடலுக்கு எந்தவிதமான கேடும் ஏற்படுத்தாமல் இருப்பது பாதுகாப்பான உணவு

○ பாதுகாப்பற்ற உணவு என்பது கலப்படம் செய்யப்பட்ட உணவாக இருக்கலாம் அல்லது அதனை உட்கொள்ளும் நுகர்வோர் உடல் நலம் பாதிக்கப்பட்டு வாந்தி, பேதி , வயிற்று வலி போன்ற உபாதைகளுக்கு உள்ளாகலாம்

○ உணவினை தயாரிக்கும் போதும் , விநியோகிக்கப்படும் போதும், சந்தையிடப்படும் போதும் நுகர்வோரை மனதில் நிறுத்தி தயாரிக்கப்படுமாயின் அது பாதுகாப்பான உணவாக நிச்சயம் இருக்கக்கூடும்

விவசாய விளைபொருட்களை பொறுத்தவரையில் செயற்கை உரங்கள் மற்றும் அளவுக்கு அதிகமான பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு, செயற்கை விவசாய முறைகள் போன்றவற்றினால் பாதுகாப்பற்ற விளைபொருட்கள் விளைவிக்கப்படுகின்றன.

## நுகர்வோருக்கு உணவு கிடைக்கச் செய்வதில் உள்ள தற்போதைய ஆபத்து:

1. உலக மயமாக்கப்பட்ட பின்னனியில் உணவு,
2. வணிகம் தாராளமயமாக்குதல்மூலம்.
3. உலகமயம் காரணமாய் உணவு பற்றாக்குறை
4. விவசாயம் நிறுவனமயமாக்குதல்.
5. வாழ்வின் மீதான கார்ப்பரேட் நிறுவனங்கள் ஆதிக்கம்.
6. உணவுக்கான உரிமைகள் மற்றும் பொறுப்புகள்.



**களைகளால் உணவு உற்பத்தியில் ஏற்படும் பாதிப்பு**

இந்தியாவில் 4,250 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் பார்த்தீனியம் என்கிற களை பரவலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்பார்த்தீனிய விதைகள் 1950-களில் இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானியங்களிலிருந்து இந்தியாவில் பரவத் தொடங்கியது. ஜபல்பூர் நகரத்தில் உள்ள களைகள் ஆராய்ச்சி இயக்குனரக அலுவலகத்திலிருந்து வெளியாகும் அறிக்கைகள் மிக அபாகரமானதாக தகவலை தந்து விடுகிறது. அதே சமயம் இக்களைகளை கட்டுப்படுத்தினால் உணவு தானிய உற்பத்தி 2278 லட்சம் டன் உணவு உற்பத்தி இருக்கிறது. எனவே இக்களைகளை கட்டுப்படுத்திவிட்டால் உணவு தானிய உற்பத்தி உயர்வதற்கு வாய்ப்புள்ளது.



# விவசாயம், விலைவாசி, பசுமைப்புரட்சி

**உணவு கொள்கை**

அரசின் உணவுக் கொள்கை மூன்று முக்கிய நோக்கங்களை கொண்டது.

1. உணவு தானியங்களை நியாயமான விலைக்கு கொள்முதல் செய்வது.
2. நுகர்வோர்களுக்கு ஒரு நியாயமான விலைக்கு விநியோகம் செய்தல்
3. விலையை கட்டுப்படுத்திட தேவையான இருப்பை உறுதி செய்வது.

**உணவு கொள்முதல்**

2005-2006 கால கட்டத்தில் 430 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதுவே 06-07ல் 358 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இந்த கால கட்டத்தில் 21% நெல் கொள்முதல், கால கட்டத்தில் 17% ஆக குறைந்தது.

## உணவு உற்பத்தியின் நிலை

| வருடம் | நெல் | கோதுமை | பருப்பு | உற்பத்தி விகிதம் |
|---|---|---|---|---|
| 1951 | 21 | 6 | 8 | - |
| 1961 | 35 | 11 | 13 | 3 |
| 1971 | 42 | 24 | 12 | 1 |
| 1981 | 54 | 36 | 11 | 2 |
| 1991 | 74 | 55 | 14 | 4 |
| 1998 | 84 | 66 | 13 | 1 |

கடந்த 10 ஆண்டுகளில் நெல், கோதுமை, பருப்பு வகைகளில் உற்பத்தி வளர்ச்சி இருப்பினும் உணவு உற்பத்தி விகிதம் குறைந்து வந்துள்ளது தெரிகிறது.

**உணவு கிடைப்பதில் தடையான காரணிகள்**

2008-ன் பிற்பகுதியிலிருந்து உணவுப் பொருட்களின் விலைவாசி கடுமையான அளவில் பாதிப்பினை ஏற்படுத்தி வருகிறது. நெல், கோதுமை, சோளம் ஆகியவற்றின் விலை தொடர்ந்து ஏறும் அபாயம் உள்ளது.

ஒரு நபருக்கு 1 ஆண்டு 1177 கிலோ உணவு தேவை (91)-ல். தற்பொழுது 1 ஆண்டு 1152 கிலோ உணவு (2008) என குறைந்துள்ளது. எண்ணை வகைகள் தொடர்ந்து விலை ஏறிவருகிறது. Bio Diesel (இயற்கை எரிபொருள் முறைக்காக) நிலங்கள் பயன்படுத்துதல். 2005 முதல் இன்றுவரை விலை வாசி உயர்ந்து 75% சதவிகிதம் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் பொதுவாக நுகர்வோர் 70% சதவிகிதம் உணவுக்காக செலவிடும் நிலை உள்ளது. விலை ஏற்றம் காரணமாய் இது இன்னமும் ஏறும் நிலை.

உணவுப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்திட ஒரு ஒழுங்கு முறை நிர்வாக அமைப்பு இல்லாதது ஒரு குறையாகும். சைனா, பிரேசில், எகிப்து போன்ற நாடுகள் அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது.

தாய்லாந்து 2008-ல் அரிசிக்கான விலை நிர்ணயச் சட்டம் கொண்டு வந்தது. நமது நாட்டில் அரிசி ஏற்றுமதி 2008-இல் தடை செய்யப்பட்டுள்ளது.

உலகளாவிய அளவில், தேசிய அளவில், குடும்ப அளவில் தமிழர்களின் எளிய உணவான ரசம் தொடக்கத்தில் 16 வகை தாவரப் பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்டது. இந்த தாவரப் பொருட்களின் விதைகள் விவசாயிகள் பாதுகாத்து, பரிமாறி, பயிர் செய்து இந்த அரிய உணவினை பயன்படுத்தி வந்தனர். தரமான உணவுப் பொருட்கள் உற்பத்தியாகாததால், உணவுப் பழக்கத்தில் மாற்றங்கள் வந்ததால், இறக்குமதியால், இந்த ரசத்தில் கூட தாவரப் பொருட்களை பயன்படுத்தாத சூழ்நிலை உள்ளது. மேலும் நமது உணவு கலாச்சாரமும் நம்மையறியாமலேயே நமது நலவாழ்விற்கு பாதிப்பு ஏற்படுத்துகிறது.

**விவசாயத்தின் போக்கு**

உணவு உற்பத்தி மக்கட் தொகைக்கு ஏற்ப வளர்ச்சியடைய வில்லை என்கிற எதிர்மறை போக்கினையே காட்டுகிறது. மேலை நாடுகள் கடைபிடிக்கப்படும் விவசாய முறை பணப்பயிர் தொடர்புடைய லாபகரமான முறையாகும். இந்திய நாட்டில் உள்ள விவசாய முறை குடும்பம், உணவுமுறை சார்ந்தது. லாபகரமான நோக்கம் மட்டுமே கொண்டதல்ல.

**பசுமைப் புரட்சி :**

முதல் பசுமை புரட்சியின் போதுதான் ஒரு குறிப்பிட்ட காரணங்களுக்காக இயற்கை விவசாய முறையிலிருந்து மாறுபட்ட உற்பத்தி செய்திட வழிவகை செய்யப்பட்டது. இதில் பயன் படுத்தப்பட்ட பூச்சிக் கொல்லி முறைமூலம் ஏற்பட்ட விளைவுகள் காய்கறி முதல் கோழிமுட்டை வரை அனைத்தும் நஞ்சாக மாறியுள்ளது. விவசாயிகளும் உயர்விளைச்சலை எதிர்பார்த்து லாபநோக்குடன் செயல்படுவதால் உடல் பாதிப்புக்குள்ளாகும். விஞ்ஞான வளர்ச்சி என்கிற போர்வையில் உழவர்களை தவறான வழியில் நடத்தி செல்ல யாரும் வாய்ப்பளித்து விடக்கூடாது. ஏற்கனவே உழவர்கள் பயன்படுத்திய விவசாயமுறை இந்திய நாட்டின் மண்வளம் சார்ந்த ஒன்றே. மழை முகடுகள் தழுவிய மண் நிர்வாகம், மேல் மண் அரிப்பு தடுத்தல் விவசாயத்தை உறுதி படுத்தும். இது தற்போதைய சமச்சீரற்ற இரசாயன உரப்பயன் பாட்டினை விட மேலானதாகும்.

## மரபணு விதை விவசாயம்.

மரபணு மாற்ற விவசாய முறைமூலம் உலகின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்று கருதுகிறார்கள். ஆனால் இவை உடல் நலத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்தும். வளர்ந்த நாடுகளுக்கு மட்டும் இம்மரபணு விதை முறை உணவுப்பொருள் அதிக அளவில் உதவிகரமாக இருக்கும். இந்தியாவில் இவை மலட்டு விதைகள் என்றுதான் கருதவேண்டியுள்ளது. இவற்றை பூமியின் உயிர்ப்பு தன்மைக்கு எதிரானதாகவே இது இருக்கிறது. மண்ணின் பயன்பாட்டுத்தன்மை கெட்டுவிடும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள் விதைக்கப்பட்ட விளைநிலங்களுக்கு அருகே உள்ள நிலங்களிலும் காற்றுமூலமாக மகரந்த தூள்கள் பரவி பாதிப்பினை உண்டாக்கி நிலங்கள் பயனற்றதாகிவிடும் (அ) மாற்றுவகை விவசாயத்தினை மேற்கொள்ளவே முடியாது. காரணம் மண்ணும் மலட்டுத் தன்மையை அடைந்துவிடுகிறது.

நாடு முழுவதும் 20 விதை பரிசோதனை மையங்கள் உள்ளன. இந்த மையங்களை விவசாயிகள் நாடுவதில் உள்ள சிரமங்கள் போக்கப் படவேண்டும்.

இவ்வகை விவசாய பொருட்களினால் ஏற்படும் உணவு முறை தெரியாத, புரியாத நோய்களை உருவாக்கி பக்க விளைவுகளை ஏற்படுத்தும். குடல்நோய்கள் உண்டாகும்.

விதைகள் அரிய வகையானதாக மாறி தட்டுப்பாடு ஏற்படும். மரபணு மாற்றுவிதைமூலம் உருவாக்கப்படும் பயிர் வகைகள் மக்கள் தொகைக்கு ஏற்ப பயன்படுத்துவதில் உரிய ஆய்வுகள் மேற்கொண்டு அமுல்படுத்துவது அவசியம்.

முழுமையான ஆய்வுகள் இதுவரை எந்த நாட்டிலும் இல்லை. ஆனால் மரபணு மாற்று உணவுப்பொருள் விற்பனை செய்யும்போது, ‘இது மரபணு மாற்று உணவுப்பொருள்’ என விளம்பரம் செய்யப்படுகிறது. நமது நாட்டில் இவ்வாறு விளம்பரம் செய்யப்படுவது இல்லை.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டப்படி விதை ஆய்வர்களின் அதிகாரங்கள்

விதைகள் சட்டம் 1966-ன்படி நியமனம் செய்யப்பட்ட விதை ஆய்வாளர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டப்படி மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள் மற்றும் பயிர்கள் உள்ள இடங்களில் பிரவேசிக்கவும், ஆய்வு செய்யவும் அதிகாரம், வழங்கப்பட்டுள்ளது.

21-09-06 அன்று இந்திய அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிப்பாணை படி இவ்வதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதைச்சான்று இயக்க விவசாய நிலைய மறபனு மாற்று பயிற்ச்சிகளில் பரிசோதனை மேற்கொள்ள அங்கிகரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், விவசாயி இயக்கம், பணியிடம் அரசு பரிசோதனை ஆய்வளராக அறிவிக்க செய்யப்பட்டுள்ளது. விதை ஆய்வாளர்கள் மரபணு மாற்ற பயிர்களின் மாதிரிகளை எடுத்து சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றவும் இச்சட்டத்தின் பிரிவு 19(எ)-ன்கீழ் குற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விதைகளை ஒழுங்குமுறை படுத்துகின்ற அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# விவசாயம் சார்ந்த சட்டங்கள்

**உபயோகிப்பாளர், உற்பத்தியாளர்&வணிகம் சார்ந்த சட்டங்கள்**

விடுதலைக்கு பிறகு உணவுப் பொருள் உற்பத்தியில் தேக்கம் நிகழ்துள்ளது. ஆகையால் அரசு விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க முன் வந்தது.

எடையளவு சட்டம் போன்றவை மிகப் பழமையானவை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோரை பாதுகாக்க மையப்படுத்தப்பட்டது, கலப்பட தடுப்புச் சட்டம், வஞ்சக வணிகர்களிடமிருந்து உற்பத்தியாளர், நுகர்வோரையும் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டது. தர நிர்ணயச் சட்டமும் ஓர் பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தியது. நுகர்வோருக்கு கூட்டுறவு நுகர்வோர் சங்கம் மூலமும், பொது விநியோக திட்டம் மூலமாக, தட்டுப்பாடான காலங்களில், சில கட்டுப்பாடு உத்தரவுகள் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இருப்பினும், கிராமப்புறங்களில் போதிய அளவில் இச்சட்டங்களை அமுல்படுத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளது. 1980-க்கு பிறகு நுகர்வோர் பாதுகாப்பு என்பது விரிவடைந்தது. தன்னார்வ குழுக்கள் உருவாயின. 1986-ல் நுகார்வோர் பாதுகாப்புச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு, நுகர்வோர் குறைதீர் மன்றங்கள், அரசாங்க அளவில் குறைதீர்க்கும் அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

கீழே குறிப்பிட்டுள்ள சில சட்டங்கள் உற்பத்தியாளர், உபயோகிப்பாளர்கள், வணிகர்கள் என்ற அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் ஏற்படுத்தப்பட்டது.

**விவசாயப் பொருட்கள் விற்பனை சார்ந்த சட்டங்கள்:**

- Essential Commodities Act 1955
- Meat Food Products Order 1973
- Agriculture Produce (Grading & Marking) Act, 1937
- General Grading & Marking Rules 1988

**விவசாய கருவிகள் சார்ந்த சட்டங்கள் :**

- Dangerous Machines (Regulation) Act, 1983
- Dangerous Machines (Regulation) Rules 2007

**விவசாய பயிர்கள் பாதுகாப்பு சார்ந்த சட்டம்**

- Destructive Insects and Pests Act 1914
- Insecticides Act, 1968

**உரம் சார்ந்த சட்டங்கள் :**

- Fertilizers (Control) Order, 1985

**வீட்டுப் பயிர்கள் சார்ந்த சட்டங்கள் :**

- Coconut Development Board Act. (CDB)
- CDB Rules 1981
- CDB Regulation 1982

**கூட்டுறவு பண்ணைச் சட்டங்கள் :**

- National Cooperative Development Corporation (NCDC) Act, 1962
- NCDC Rule, 1975
- NCDC General Regulations, 1975
- NCDC Services Regulations,
- Multi-State Cooperative Societies Act,2002
- Multi- State Cooperative Societies Rules 2002

**விதைகள் சார்ந்த சட்டங்கள்**

- The Seeds Act, 1966
- The Seeds (Amendment) Act, 1972
- The Seeds Rules, 1968
- The Seeds (Amendment) Rules, 1973, 1974, 1981
- The Seeds (Control) Order, 1983
- Amendment in Seeds (Control) order, 1983
- E.P. Act. 1986

**உணவுப்பொருட்கள் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள்**

1. Food Safety & Standards Act 2006
2. Milk & Milk Products Order 1992
3. Bureau of Indian Standard Act
4. Consumer Protection Act
5. Updated Package Commodity Rules 1977
6. The Standards of Weight & Measures Act 1976
7. Sugar Price Determination Order 2008
8. Patent Act

## உரங்கள் ஒழுங்குபடுத்தும் ஆணை 1985.

தொடக்கத்தில் உரங்கள் ஒரு அத்தியாவசிய பொருளாக கருதப்பட்டது. பல மாறுதல்களுக்கு பிறகு இறுதியாக 1985-ல் இவ்வாணை பிறப்பிக்கப்பட்டது.

உரங்கள் ஆய்வாளார், தர நிர்ணயம், விற்பனையாளர் ஆகியோர் குறித்த வரையரை செய்யப்பட்டது.

உரங்களை விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் உரிய அதிகாரியிடம் ஒரு உரிமம் பெற்றிருக்கவேண்டும். சில நேர்வுகளில் அரசாங்கம் விதிவிலக்களிக்கலாம். ஒருமுறை உரிமம் பெற்றால் அது 3 ஆண்டுகளுக்கு செல்லும். இவ்வுரிமத்தை பெறுவதற்கு கட்டணம் உண்டு.

மத்திய அரசாங்கம் அதிகபட்ச விலை நிர்ணயம் செய்யும். எவ்வாறு இருப்பு செய்வது, எந்த மாநிலங்களில் விற்பது, எந்த காலத்திற்குள் விற்கப்படவேண்டும், இருப்பு அறிவிப்பு, விலை, போன்றவற்றை மத்திய அரசு நிர்ணயம் செய்யும்.

உற்பத்தி செய்வதற்கான உரிமம் இருந்தால் அன்றி எவரும் எந்த உரத்தையும் வேறு ஒரு உரத்தோடு கலப்புரமாக விற்கக் கூடாது. அதே வகையில் உரங்களை இறக்குமதி செய்வதற்கும் உரிய உரிமத்தை மத்திய அரசிடம் பெறவேண்டும். மேற்படி ஆணைகளை மீறுபவர்களுக்கு தண்டனை உண்டு.

## பூச்சிக்கொல்லி சட்டம் 1968

மனிதர்கள் மற்றும் மிருகங்களுக்கு தீங்கு விளைவிக்காமல் இருப்பதற்கு பூச்சிக்கொல்லிகள் இறக்குமதி செய்ய, உற்பத்தி செய்ய, விற்க, எடுத்துச் செல்ல, விநியோகிக்க மற்றும் பயன்படுத்த இந்த சட்டம் இயற்றப்பட்டது.

மேற்படி பணிகளை செய்ய இச்சட்டத்தின் நியமனம் செய்யப்பட்ட அதிகாரியிடம் உரிய கட்டணம் செலுத்தி உரிமம் பெறவேண்டும். தேவை ஏற்பட்டால் உரிமத்தை புதுப்பித்துக் கொள்ளலாம். வேளாண்துறையின் இணை இயக்குநர் துணை இயக்குநர், உதவி இயக்குநர் ஆகியோர் இச்சட்டத்தின்கீழ் பூச்சிக்கொல்லி ஆய்வாளர்கள் என்று நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பூச்சிக்கொல்லி ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் பிரிவு 42-ன்படி ஒரு போலீஸ் அதிகாரி ஆவார்.

இச்சட்டத்தின் வகையங்களை மீறுபவர்களுக்கு தண்டனை உண்டு. சில நிகழ்வுகளில் சிறை தண்டனையும் கிடைக்கலாம்.

உரிமம் வைத்திருப்பவர் உரிமத்தை வேறொரு நபருக்கு மாற்றலாம்.

பூச்சிக்கொல்லி ஆய்வாளர்கள் அவர் எல்லைக்குட் பட்ட பகுதியில் பூச்சிக்கொல்லி உற்பத்தி இடங்களை, கடைகளை பார்வையிடவும், தேவை ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் பெற்றவராவார்.

# விவசாயத்தில் இரசாயன பொருட்கள் பயன்படுத்தலின் விளைவுகள்



**பூச்சிக்கொல்லிகளால் ஏற்படும் ஆபத்து: குறைப்பது எப்படி?**

பண்டைய விவசாய முறைகளில், இரசாயனங்களைப் பயன்படுத்தவேண்டிய அவசியம் எற்படவில்லை. இன்றைய வேளாண்மை, இரசாயனத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே இரசாயனங்களின் நச்சுத்தன்மையுடைய விளைவுகளிலிருந்து விவசாயிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நுகர்வோர்களுக்கு நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி செய்வதும் அவர்களின் கடமையாகும்.

பூச்சிக்கொல்லிகள் அல்லது உரங்களைக் கையாளும் பொழுது பாதுகாப்பு உடைகள் மற்றும் கருவிகளை மக்கள் பயன்படுத்தவேண்டும்.

நீங்கள் பூச்சிக்கொல்லிகளைக் கையாளும்போது அவற்றை மிகுந்த கவனத்துடன் கையாளுங்கள். உங்களையும் உங்களைச் சுற்றி உள்ளவர்களையும் பாதுகாத்துக்கொள்ள கீழ்வருவனவற்றைச் செய்யவும்:

- முடிந்தவரை பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தாமல் உயிரியல் பூச்சிக்கொல்லிகளை (Bio Pesticides) பயன்படுத்தி பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும்.
- தனியொரு ஆளாக இருக்கும்பொழுது பூச்சிக் கொல்லிகளைக் கையாளாதீர்கள்.
- குறிப்பிட்ட பூச்சிக்கொல்லிகளைக் குறிப்பிட்ட பயிர்களின் மீது மட்டுமே பயன்படுத்தவும்.
- குறைந்த அளவிலேயே பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தவும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவது நல்லதல்ல.
- பல வகையான பூச்சிக்கொல்லிகளை ஒன்று சேர்த்து கலந்து தெளிக்ககூடாது.

- உங்கள் உடலுக்குச் சமீபமாகப் பூச்சிக்கொல்லிகளை வைக்காமல் தொலைவில் வைக்கவும்.
- பூச்சிக்கொல்லிகளை மற்றவர்கள் கையாளுவதற்கு வாய்ப்பில்லாதவாறு வைக்கவும்.
- நீர் நிலைகளிலிருந்து பூச்சிக்கொல்லிகளை தொலைவில் வைக்கவும்.
- காற்று வேகமாக வீசும் போதும், மழை பெய்யும்போதும் அல்லது மழை பெய்வதற்கு முன்பும் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தாதீர்கள்.
- உங்கள் ஆடைகள் உங்களை முழுவதுமாக மூடியுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவும்.
- பூச்சிக்கொல்லிகளைக் கையாளும்போது உங்கள் கண்கள், முகம் மற்றும் கழுத்தைத் தொடாதீர்கள்.
- உண்பதற்கு முன், குடிப்பதற்கு முன், உங்கள் முகத்தைத் தொடுவதற்கு முன், கைகளை நன்கு கழுவவும்.
- பாதுகாப்பு உடைகள் மற்றும் கருவிகள் உங்களிடமிருந்தால் அல்லது அவற்றை நீங்கள் பெறமுடிந்தால் அவற்றைப் பயன்படுத்தவும்.
- பூச்சிக்கொல்லி தெளிக்கப்பட்ட வயல்களில், தோட்டங்களில், பாதுகாப்பாகச் செல்ல முடியுமா என்று தெரிந்த பின்னரே செல்லுங்கள்.
- கால்நடைகளை பூச்சி மருந்து தெளித்த வயல்களில் மேய்ச்சலுக்கு விடக் கூடாது.
- பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்திய பின்னர் நன்கு குளிக்கவும்.
- பூச்சிக்கொல்லி நஞ்சுகளின் தாக்குதல் பலவிதமான உடல்நலக் கேடுகளை உண்டாக்கலாம். இவற்றின் தாக்கத்திற்கு ஆளானவர்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட அறிகுறிகள் காணப்படலாம். சில அறிகுறிகள் தாக்கப்படும் பொழுதே வெளிப்படலாம். மற்ற அறிகுறிகள் வெளிப்படுவதற்கு பல மணி நேரமோ, பல நாட்களோ அல்லது வருடங்களோ கூட ஆகலாம்.
- பூச்சிகொல்லி நஞ்சுகளின் தாக்குதலுக்கு உள்ளானால் பூச்சிகொல்லி மருந்தின் கொள்கலனில் தெரிவிக்கப்பட்ட நஞ்சு முறி மருந்தினை உடனடியாக உட்கொள்ளவேண்டும்.
- பூச்சிக்கொல்லிகளின் தாக்கத்திற்கு ஆளான பலருக்குத் தாம் அத்தகைய தாக்கத்திற்கு ஆளாகியிருப்பது தெரியாமலும் இருக்கக்கூடும். பூச்சிக்கொல்லிகளால் மாசுப்படுத்தப்பட்ட உணவு மற்றும் நீரினை உட்கொள்ளும் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள், பூச்சிக்கொல்லிகள் தெளிக்கப்பட்ட நிலங்களின் அருகே வசிப்பவர்கள், அவ்வழியாகச் செல்பவர்கள், பூச்சிக்கொல்லிகளைக் கைகளில் மற்றும் வாகனங்களில் சுமந்து செல்பவர்களும் மற்றவர்களும் கூட விவசாயிகளைப் போலவே பூச்சிக்கொல்லிகளால் பாதிப்பு அடையலாம். ஆகவே எல்லோருமே தங்களது சுற்றுப்புறத்திலும் பூச்சிக்கொல்லிகள் இருக்கின்றன என்பதை அறிந்து, உணர்ந்து, விவசாயிகள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறைகளைக் தாங்களும் பின்பற்றவேண்டும்.
- விவசாயிகள் முடிந்தவரை நச்சுள்ள பூச்சிகொல்லிகளை பயன்படுத்தாமல் உயிரியல் பூச்சி காரணிகளை பயன்படுத்தலாம். மேலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.



# உழவர் சந்தை

உழுவோர்க்கு உயர்வு - உண்போர்க்கு நிறைவு என்கிற நோக்குடன் 1999-ம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதுவரை ஏறக்குறைய 110 உழவர் சந்தைகள் தமிழ்நாட்டில் உள்ளது. விவசாயிகளுக்கு உகந்த விலை நுகர்வோருக்கு நேரடி விற்பனை, சரியான எடை, பசுமையான விவசாய பொருட்கள், ஒரே இடத்தில் அனைத்து விவசாயப் பொருட்களும் கிடைத்தல் போன்ற அனுகூலங்கள் இதனால் ஏற்படுகிறது.

உழவர் சந்தையில் விவசாயிகளுக்கும், நுகர்வோர்களுக்கும் அனைத்து வசதிகளும் செய்யப் பட்டுள்ளன. சில இங்களில் புறக்காவல் நிலையம், கூட்டுறவு வங்கி கிளை போன்ற வசதிகளும் உள்ளன.

**வாங்கும் முன் நுகர்வோர்/விவசாயிகள் கவனிக்க வேண்டியவை.**

1. வில்லை (லேபிள்)

2. அதிகபட்ச சில்லரை விற்பனை விலை குறிக்கப்பட்டது.

3. தேவைப்படின் பாதுகாப்பு மற்றும் தரச்சான்று-?

4. படித்து விலையுடன் சேர்த்துள்ள வரி குறித்து கேட்டல்.

5. ஏதேனும் ஆவணங்களில் நுகர்வோர் ஒப்பமிட வேண்டியிருப்பின் அதில் கண்டுள்ள அனைத்து நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளையும் நன்றாகப் படித்து அதனை முழுமையாக பூர்த்தி செய்தல் (உதாரணத்திற்கு தவணை முறையில் வாங்கும் போது, கடனில் வாங்கும்போது, மாற்றுப் பொருள், சிறப்புத் திட்டங்கள் முதலியன) வட்டி கணக்கு விகிதத்தை சரியாக படித்தல் வேண்டும்.

6. குறைபாடுகள் இருப்பின் பொருட்கள் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுமா என்பதனை கடைக்காரரிடம் உறுதி செய்து கொள்ள வேண்டும். (நுகர்வோர் பாதுகாப்பு விதிகளின்படி) ‘‘விற்ற பொருட்கள் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது” என்ற பிரிவுகள் சட்டத்திற்கு புறம்பானவை,

7. ஒரு பொருளை வாங்குவதற்கு முன் அதன் தேவையை உணர்ந்து தீர்மானிக்க போதிய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

8. அனைத்து பொருட்களுக்கும் விலை பட்டியலை வலியுறுத்துங்கள்.

9. வல்லுனர் அறிவுரைப்படி பொருட்களை வாங்கவேண்டும். உத்திரவாதம் மற்றும் பொறுப்புறுதி குறித்த சான்றுகள் மற்றும் அனைத்து விற்பனை இரசீதுகளையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

குறைபாடுகள் காணப்பட்டால் அதனை உடனடியாக கடைக்காரர்- தயாரிப்பாளர் இவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும்.

# விவசாய காப்பீட்டுத் திட்டம்





### பயிர் காப்பீட்டுத் திட்டம்

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயிர் கடன் பெறாத விவசாயிகளும் காப்பீடு செய்யலாம். தமிழ்நாடு அரசு காப்பீடுதாரர் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50% மான்யமாக வழங்குகிறது.

### விற்பனைத் திட்டம்

விற்பனையை பொருத்த மட்டில் நகராட்சி மற்றும் பேரூராட்சியில் தமிழ்நாட்டில் 1999 முதல் உழவர் சந்தைகள் தேர்வு பெற்று வருகிறது. ஏறக்குறைய நாள் ஒன்றுக்கு 7800 விவசாயிகளும், 1,97,000 நுகர்வோர்கள் பயன்பட்டு வருகின்றனர்.

### இயந்திரங்களுக்கு மான்யம்

விவசாய தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்படுவதால் இயந்திரங்கள் வாங்க 25% மான்யம் வழங்கப்படுகிறது.

விவசாய இயந்திரங்கள் அரசாங்கத்தால் வாடகைக்கு விடப்படுகிறது.

வெள்ளம், மழை, இயற்கை சீரழிவு, அவர்களுக்கு அரசு சார்பில் தேசிய பயிர் காப்பீட்டு திட்டம் நடைமுறையில் உள்ளது.

தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் தனி விவசாயிகள் அவர்களது பயிர் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும் அரசு புள்ளி விபரப்படி பாதிப்பு ஏற்பட்டதாக அறிவித்தால் மட்டுமே தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தில் காப்பீட்டு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு விவசாயி முழுமையான சேதம் ஏற்பட்டிருந்தால் காப்பீடு கிடைப்பதில் சிரமம் உள்ளது.

பல பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள், தனியார் காப்பீட்டு நிறுவனங்களும் தற்போது விவசாய பயிர் காப்பீடு செய்கின்றார்கள். காப்பீடு மேற்கொள்ளும்போது நாம் முழுமையாக காப்பீடு செய்துள்ளோமா என்பதையும், பாதிக்கப்பட்டவர் காப்பீடு பெற உள்ள விதிமுறைகளை நன்கு ஆராய்ந்து காப்பீடு மேற்கொள்ள வேண்டும்.

வங்கிகளில் பயிர் கடன் வாங்கும்போதும் உபகரணங்களை நாம் காப்பீடு செய்வது மிக அவசியம். நாம் வாங்கும் கடனுக்கு, வங்கி, காப்பீடு எப்போது செய்தது என கவனிக்க வேண்டும். வங்கிகளில் சமீபத்தில் விவசாய கடன் தள்ளுபடியில் பல விவசாயிகள் உண்மையிலேயே விவசாயத்திற்காக கடன் பெற்றுள்ளதை கடன் பெறும்போது உரிய ஆவணங்கள் எடுத்து செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் சாதாரண கடன் (நகை & பயிர்) பெற்றவர்களுக்கு இந்த சலுகை கிடைக்காமல் போய்விட்டது. விவசாயத்திற்காக கடன் பெறும்போது உரிய ஆவணங்களை அளித்து விவசாயக்கடன் என்ற பதிவு மிக முக்கியமானது.

விவசாயிகள் செய்த காப்பீட்டில் பாதிப்பு ஏற்பட்டால் காப்பீடு செய்த நிறுவனங்களுக்கு உடனடியாக எழுத்து மூலம் புகார் பதிவு செய்வது மிக மிக அவசியம்.

# மின்நுகர்வும், விவசாயிகளின் உரிமைகளும்

**மின் நுகர்வும் விவசாயிகள் உரிமைகளும்**

இந்தியாவில் மின்சாரம் பயன்படுத்தும் நுகர்வோர்கள் ஆவார்கள். சமீபத்தில் புதியதாக மின்சார சட்டம் 2003 உருவாக்கி நடைமுறையில் உள்ளது. அதன்படி ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உருவாக்கப்பட்டு மின் கட்டணம், மின் பகிர்மானம், மின் உற்பத்தி சம்பந்தமானவற்றை ஒழுங்குபடுத்தவும், மின்சாரம் வழங்கவும், அந்த சட்டம் மூலம் மின் நுகர்வோர் குறைகளை போக்க “மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்” உருவாக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள அனைத்து அதிகாரங்களும் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அளிக்கப்பட்டு தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்பார்வை பொறியாளர் தலைவராகவும், சட்டம் படித்த வழக்கறிஞர் மற்றும் நுகர்வோர் சங்க பொறுப்பாளர் உறுப்பினர்களாகவும் கொண்ட மன்றம் செயல்பட்டு வருகிறது. மின் நுகர்வோர்கள் கொடுத்த புகார்களை விசாரித்தும் வருகின்றார்கள்.

மின்சாரம் பயன்படுத்தும் விவசாயிகளின் மின் இணைப்பை துண்டிக்கப்படலும் / மின் இணைப்பு அளிக்க காலதாமதம்/ கட்டணம் பிரச்சனை / குறைந்த அழுத்த மின்சாரம்/ நீண்டகாலமாக பழுதடைந்த டிரான்ஸ்பாரம் மாற்றாதது/ விவசாய மின் இணைப்பு மூப்பு காலம் அறிவித்தும் அளிக்காதது/ மின் கம்பங்கள் கம்பி திருடுபோய் பல நாட்களாகியும் மாற்றி இணைப்பு வழங்காதது/ மீட்டர் பழுதடைந்ததை மாற்றாதது/ தவறான கட்டணம் விதிப்பது/ டெபாசிட் இருந்தும் உரிய கணக்கை சரிபார்க்காமல் அதிக தொகை கேட்பது/ தவறான மின் துண்டிப்பு போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட நுகர்வோர்கள்

தலைவர்,

மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,

மேற்பார்வை பொறியாளர் அலுவலகம்,

தமிழ்நாடு மின்சார வாரியம்,

.................................................................................. மாவட்டம்.

என்ற முகவரியில் உரிய படிவத்தில் புகார் செய்து நிவாரணம் பெறலாம்.

மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு

மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 19-ஏ, ருக்குமணி லட்சுமிபதி சாலை (டிட்கோ காம்ப்ளக்ஸ்) எழும்பூர்,சென்னை-8.

என்ற விலாசத்தில் மேல் முறையீடு செய்தும் நிவாரணம் பெறலாம்.

# விவசாயியும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும்

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்

நாம் காசுகொடுத்து வாங்கும் பொருட்கள் (விதை, உரம், பூச்சிகொல்லி மருந்து) நாம் காசு கொடுத்து பெறும் சேவை (மண் சோதனை, நீர் சோதனை, விதை உரம் சோதனைகள்) குறையிருந்தால் அவர்கள் விளம்பரப்படுத்தும்படி விளைச்சலோ! தரமோ அல்லது தரம் இல்லாமல் முளைப்பு தன்மையே இல்லாமல் இருந்தால் அது நேர்மையற்ற வணிக நடைமுறை ஆகும்.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் நாம் என்ன பரிகாரம் பெறலாம் (பிரிவு 14)

அ. குறையிருந்தால் குறையை நிவர்த்தி செய்து கொள்ளலாம்

ஆ. குறையிருக்கும் பொருளை மாற்றி தரமான புதிய பொருள் பெறலாம்

இ. சேவை திருப்தி இல்லாவிட்டால் அதற்கான பணம் திரும்ப பெறலாம்

ஈ. குறையுள்ள பொருளினால் நமக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு ஈடு பெறலாம்.

உ குறையுள்ள பொருள் / சேவையால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு நட்டஈடு பெறலாம்.

ஊ. பாதிப்புக்காக நாம் நுகர்வோர் மன்றத்தில் வழக்கு தொடுத்தினால் அதற்காக ஏற்பட்ட செலவையும் பெறலாம்.

## நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் பிரச்சனைகளை நிரூபித்து நிவாரணம் பெற வழிவகை உள்ளது:-

1. உட்பிரிவு (சி) படி சோதனைக் கூடத்திற்கு மாதிரி விதை, உரம், பூச்சிகொல்லி மருந்து அனுப்பி சோதனையிட்டு அறிக்கை பெற்று நிரூபிக்கலாம்.
2. உட்பிரிவு (4)(வி)படி பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை பார்வையிட்டு அறிக்கை தரக்கோரி விவசாய அதிகாரி & வழக்கறிஞர் கொண்ட கமிஷன் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மூலம் நியமித்து, பார்வையிட்டு அறிக்கை தர கோரலாம். அதன்படி நிலத்தில் முளைப்பு தன்மை இல்லாதது, மழை வெள்ளத்தில் காப்பீடு செய்த பயிர் நாசமானது, கலப்பு விதையால் பயிர் நட்டம் ஏற்பட்டதை நிரூபிக்கலாம்.
3. உட்பிரிவு (4) (1) சாட்சிகளை வரவழைத்து விவசாய நிலத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை நிரூபிக்கலாம்.
4. உட்பிரிவு (4) (11) எந்த ஆவணத்தையும், பொருளையும் நுகர்வோர் மன்றத்தில் ஆஜர்படுத்த உத்திரவிடலாம்.

## தடை ஆணை:-

விவசாயிகளுக்கு விற்கப்படும் விதை, உரம், பூச்சிகொல்லி மருந்துகள் போலியானவை என ஆய்வுகள் மூலம் வழக்கு நடந்துக்கொண்டிருக்கும் போதே நிரூபனமானால் நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (3பி) படி நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திலேயே நாம் நியாயமான இடைக்கால தடை பெறலாம்.

## நாம் வாங்கும் பொருட்களில் பிரச்சனை என்றால்?

1. நடைமுறையில் உள்ள சட்டத்தின் நிர்ணயம் செய்யப்பட்ட விலையைவிட அதிகமாக (உ.ம்.டீசல்,உரம்)...
2. பொருள் மீது உள்ள (எம்.ஆர்.பி) விலையைவிட அதிகமாக

3. இருதரப்பு ஒப்புக்கொண்ட விலையைவிட அதிகமாக

4. அளிக்கப்பட்ட சேவையில் குறை இருந்தால்.

ஆகிய பிரச்சனை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2(சி) (4) படி மீறினால் நு. பா. சட்டம் உட்பிரிவு 2(சி) (ஏ)படி நடைமுறையில் உள்ள சட்டத்தால் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற பாதுகாப்புக்கான தரத்கட்டுப்பாட்டை மீறினால் (எ.கா விதை, உரம், பூச்சிகொல்லி மருந்துகள் தன்மை) (பி) மற்றும் (4) வாங்கிய பொருள் பொதுமக்களுக்கு தீங்கனால், தீங்கு விளைவிக்கும், உயிருக்கும் பாதுகாப்பிற்கும் தீங்கு என தெரிந்தால்! நாம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்படி புகார் தொடுத்து பரிகாரம் கோரலாம். அளிக்கப்பட்ட உத்திரவாத காலத்திற்குள் தயாரிப்பு கோளாரினால் (எ. கா.) டிராக்டர், உழவு பொருட்கள், டீசல் இன்ஜின், மோட்டார் ஆகிய பொருட்களில் பாதிப்பு ஏற்பட்டால் புகார் செய்யலாம்.

## நேர்மையற்ற வணிக நடவடிக்கை என்றால் என்ன?

நேர்மையற்ற வணிக நடவடிக்கையால் நுகர்வோர் பாதிக்கப்பட்டால் பிரிவு 2 பாதுகாப்பு அளிக்கின்றது. உட்பிரிவு (1) வாங்கிய பொருள் ஒரு குறிப்பிட்ட தரம் உடையது, தன்மையுடையது, எண்ணிக்கை உடையது, பிரிவை சார்ந்தது, ஒரு மாதிரியை சார்ந்தது என தெரிவித்து ஏமாற்றினால் : நீடித்து உழைக்கும் என உத்திரவாதம் என தவறாக கூறுவது மீதும் போலியான சான்றிதழ்கள், விளம்பரபடுத்திய விலையை விட அதிகமாக கேட்பது, பொருட்களை வாங்கினால் இலவசம், பரிசு என கொடுப்பது இவைகள் மீதும் இந்த சட்டத்தின்படி வழக்கு தொடுத்து நிவாரணம் பெறலாம்.

## தீர்ப்பை எப்படி நடைமுறைப்படுத்துவது?

தீர்ப்பு பெற்ற 30 நாட்களுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும். தவறினால் பிரிவு 27-ன் கீழ் மேலும் ஒரு அபராதமும் & கைது செய்து சிறை தண்டனை அளிக்கவும் இச்சட்டத்தில் இடமுள்ளது.

## தொந்தரவு செய்யும் புகாராக இருந்தால்?

வேண்டுமென்றே, தொந்தரவு செய்யவும், தனிப்பட்ட விரோதம் காரணமாகவும், வழக்கு தொடுத்தால், வழக்கு தொடுத்தவர் மீது பிரிவு—26-ன் கீழ் ரூ.10,000/- வரை அபராதம் விதிக்கலாம்.

## எவ்வளவு தொகைக்காக எங்கு புகார் செய்யலாம்?

1. ஒரு புகாரின் தன்மை ரூ.20/- லட்சம் வரை-மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திலும் (அந்தந்த மாவட்டத்தில்)

2. ரூ.20 லட்சம் மேல் ரூ.1 கோடி வரை மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திலும் (சென்னை)

3. ரூ1.கோடிக்கு மேல் தேசிய நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையத்திலும் (புதுடெல்லி) புகார் செய்யலாம்.

## தாக்கல் செய்யும் முறை!

புகார் தொடுப்பவர் நேரிடையாகவும், நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் மூலமும், வழக்கறிஞர் துணையுடனும் புகார் செய்யலாம்.

## மேல்முறையீடு செய்யலாமா?
## (பிரிவு 15 (19))–ன்படி)

மாவட்ட மன்றம், மாநில ஆணையம், தேசிய ஆணையம் ஆகிய மன்றங்களில் புகார் சாதகமாக அல்லது பாதகமாக ஏற்பட்டால் உத்திரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும். மேல்முறையீடு செய்ய எந்த கட்டணமும் இல்லை. தேசிய ஆணையத்தின் தீர்ப்பின் மீது 30 நாட்களுக்குள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

அ. மாவட்ட மன்ற தீர்ப்பை எதிர்த்து பிரிவு - 15

ஆ. மாநில ஆணையத்தின் தீர்ப்பை எதிர்த்து-பிரிவு- 19

இ. தேசிய ஆணையத்தின் தீர்ப்பை எதிர்த்து-பிரிவு- 23

**புகார் எந்த மன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டும்?**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டப்படி பிரிவு 11-ன்படி சம்பவம் உருவான இடம் அல்லது நாம் எங்கு பொருளை வாங்கினோம் அந்த மாவட்ட மன்றத்தில் மட்டுமே புகார் தொடுக்கலாம். இது இரண்டும் இல்லாமல் நான் வசிக்கும் ஊரில் வழக்கு நடத்த உதவியாக இருக்கும் என தொடுக்க முடியாது.

**காலவரை**

சம்பவம் உருவான நாளிலிருந்து இரண்டு வருடத்திற்குள் புகார் தொடுக்க வேண்டும்.

நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு 90 நாட்களுக்குள் வழக்கு முடிக்க வேண்டும் பரிசோதனை கூடம், ஆணையர் நியமிப்பது, பார்வையிடுதல், சாட்சியங்களை விசாரித்தல், ஆவணங்களை தாக்கிடக் கோருதல் போன்ற சமயங்களில் 6 மாதங்களில் முடிக்க வேண்டும்.

**புகார் வேறு மன்றத்திற்கு மாற்ற முடியுமா?**

பிரிவு 22பி படி வழக்கு விசாரணையின் போது ஒருதலைபட்சமாக விசாரிப்பதாகவோ, விசாரணை செய்பவர்களாக நமக்கு நீதி பாதிக்கப்படும் என கருதினால் மாநில/தேசிய ஆணையத்திற்கும் மேல்முறையீடு செய்தால் புகார் இருக்கும் நிலையிலேயே நீதியின் நிமித்தமாக வேறு மன்றத்திற்கு மாற்றி உத்திரவிடலாம்.

ஒரு நல்ல புகார் எப்படி இருக்க வேண்டும், நாம் வெற்றி பெற என்ன என்ன வேண்டும்

1. நாம் வாங்கிய பொருள்/சேவைக்கு செலுத்திய பணத்திற்கு ரசீது.
2. பொருட்களின் மாதிரி.
3. பொருட்களுக்கு சான்று அளித்திருந்தால் அச்சான்றும்
4. பொருட்களின் மாதிரியை ஆய்வுக்கு அனுப்பி சான்று
5. விவசாய அதிகாரிகளிடம் புகார் அளித்து பாதிப்புகளை ஆய்வு செய்த அறிக்கை.
6. சாட்சியங்கள்/ஆவணங்கள்
7. செலவு செய்த விவரங்களையும்,ஏற்பட்ட நட்டத்தையும் தெளிவாக குறிப்பிட தேவையான ஆவணங்கள்
8. பொருள் விலை தெரிந்தால் லாபம் எவ்வளவு கிடைத்திருக்கும் என்ற ஆவணம்
10. பாதிப்பு ஏற்பட்டவுடன் பாதிப்பு ஏற்படுத்தியவருக்கு உடன் எழுத்து மூலம் பதிவு அஞ்சலில் அனுப்பிய ஆதாரம் ஆவணம்.
11. புகார் தெளிவாகவும், விரிவாகவும், ஆவணங்களை சுட்டிகாட்டியும், கோரும் பரிகாரம் ஆதாரத்துடன் நுகர்வோர் மன்றத்திற்கு எழுதப்பட வேண்டும்.
12. விவசாயம் செய்த பயிர் சம்பந்தமான கிராம கணக்குகள்.

இலவசமாக நாம் பெறும் சேவை மற்றும் பொருட்களில் குறைபாடு இருந்தால் நாம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் மூலம் வழக்கு தொடுக்கவோ, பரிகாரம் கோரவோ முடியாது.

**விவசாயிகள் எப்படி நுகர்வோர் சட்டத்தை பயன்படுத்துவது?**

விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் பருவநிலை மாற்றம், மழை, வெள்ளம் இவற்றால் போதிய விளைச்சல் இல்லை! இப்படியும் பாதிக்கப்பட்டு விதை, உரம், பூச்சிகொல்லி மருந்து மண்சோதனை இப்படி காசு கொடுத்து வாங்கும் பொருட்கள், சேவையாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள்.

## விவசாய நுகர்வோர் பாதுகாப்பு

ஒரு பொருளை, ஒரு சேவையை பயன்படுத்தும் போது அதில் சச்சரவு ஏற்பட்டால், நம்மை ஏமாற்றினால் நமது உரிமைகளை பெற 1986-ம் ஆண்டுக்கு முன்பு பல சட்டங்கள் நடைமுறையில் இருந்தது. அந்த சட்டம் தண்டனை கொடுக்கக்கூடிய சட்டமாகும். எனவே நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ல் இந்தியாவில் கொண்டு வரப்பட்டது.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ''மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்'' செயல்பட்டு வருகின்றது.

தமிழக அரசு மாதந்தோறும் நடைபெறும் ''விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்'' போலவே

1. தன்னார்வ நுகர்வோர் குழுக்களுக்கான காலாண்டுக் கூட்டம்.
2. மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டம் (2மாதத்திற்கு ஒருமுறை)
3. மாவட்ட பொது விநியோக ஆலோசனை மற்றும் மேம்பாட்டுக் கூட்டம் (மாதம் ஒருமுறை)
4. கோட்ட அளவில் பொது விநியோக ஆலோசனை மற்றும் மேம்பாட்டுக் கூட்டம்.
5. துறைவாரியான நுகர்வோர் தன்னார்வ நுகர்வோர் குழுக்களுக்கான காலாண்டுக் கூட்டம் (உதாரணம்:மின்சார வாரியம், போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலைத் துறை, கல்வித்துறை, தொழிலாளத் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத்துறை, மருத்துவத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், பொதுப்பணித்துறை, சமூக நலத்துறை இன்னும் இதர துறைகள்) உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் வழிகாட்டுதல்படி நடைபெற்று வருவதுடன் கண்காணிக்கப்பட்டும் வருகின்றது.
6. மாவட்ட அளவில் தீர்க்கப்படாத நுகர்வோர் பிரச்சனைகள் மாநில அளவில் உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் அவர்கள் தலைமையில் 3 மாதத்திற்கு ஒரு முறை மாநில அளவிலான தன்னார்வ நுகர்வோர் குழுக்களுக்ச்சான கூட்டம் நடைபெறுகிறது.
7. தமிழக அரசு உணவுத்துறை அமைச்சர் தலைமையில் ''மாநில நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில்'' அமைக்கப்பட்டு 6 மாதத்திற்கு ஒருமுறை இக்கூட்டம் கூட்டப்பட்டு விளம்பரங்கள், தரம், நுகர்வோர் சேவை மேம்படுத்துவது போன்ற ஆலோசனைகளும் நடத்தப்படுகின்றது.
8. விவசாயிகள் பயிரிட்ட பிறகு போதிய லாபம் இல்லாமல் நட்டம் அடைவது, பயிரிட்டது சரியான முளைப்புத் தன்மை இல்லதது, தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்தால் பாதிப்பு, உழவுக்கான டிராக்டர், இதர பொருட்கள், பயிர் மற்றும் உழவு சார்ந்த பொருட்கள் செய்தல், கிணறு, போர் அமைக்க பயன்படுத்திய இயந்திரங்கள் பிரச்சனை, விவசாய விலங்குகள் காப்பீடு செய்தல் கூட்டுறவு கடன்கள், பயிர்கள் ஏற்றி அனுப்பிய வாகனம், பார்சல் சர்வீஸ், பயிர் காப்பீட்டு திட்டத்தில் பிரச்சனை இவற்றினால் பாதிக்கப்பட்டால் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை விவசாயிகள் பயன்படுத்தி நிவாரணம் பெறலாம். விவசாயத்தை காப்பாற்றவும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் ஒரு ஆதாரமாக பயன்படும்.



# விவசாயம் சார்ந்த நுகர்வோர் குறைதீர் மன்ற வழக்குகள் / தீர்ப்புகள்

<u>மாதிரி புகார் மனு</u>

உயர்திரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்
கடலூர் மாவட்டம்

சி.சி. /2009

எஸ்.தெய்வகுரு .. முறையீடுதாரர்

-எதிர்-

1. ராசிவாம் அக்ரோ விற்பனை நிலையம் .. எதிர்தரப்பினர்
2. எம்,எஸ்.மான்சென் விதை உற்பத்தி நிறுவனம்

<u>முறையீடுதாரர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு</u>

<u>12-ன் கீழ் முறையீடு</u>

I. முறையீடுதாரர் : எஸ். தெய்வகுரு த/பெ.சிவலிங்கம், மெயின் ரோடு களையூர் & அஞ்சல், கடலூர் தாலுக்கா & மாவட்டம்.

II. எதிர்தரப்பினர் 1 உரிமையாளர் ராசிவாம் அக்ரோ விற்பனை நிலையம், குமரப்ப காம்ப்ளக்ஸ் 153, மெயின் ரோடு, கடலூர்-1,

2. எம்/எஸ்.மான்சென் விதை உற்பத்தி நிறுவனம், உலகநாதன் சாலை, ஆத்தூர்& அஞ்சல், சேலம் மாவட்டம்.

III. மனுதாரர் சமர்ப்பித்துக்கொள்வதாவது 2-வது எதிர்தரப்பினர் தயாரித்த விதை 1-வது எதிர்தர்ப்பினரால் விற்கப்பட்டு அதை முறையீடுதாரர் பயிரி, சரியாக கதிர் வராததால் நட்டம் ஏற்பட்டது. எனவே நஷ்ட ஈடு கோரி முறையீடு செய்துள்ளார். 1-வது எதிர்தரப்பினர் தயாரித்து விற்பனை செய்த விதை விற்பனை செய்த விதை தரம் குறைந்ததாக இருந்ததால் முளைப்பு தன்மை முழுமையாக ஏற்படாமல் முறையீடுதாரர் நட்டம் அடைந்ததால் அவரும் எதிர்தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்.

IV. வழக்கின் சுருக்கம்.

1. முறையீடுதாரர் ஒரு விவசாயி, நடப்பு 2009-ல் பயிர் செய்ய உத்தேசித்திருந்தார். தமது நிறுவனத்தில் தயாரித்த நெல்விதை தரமானது என்றும், அதிக விளைச்சல் கொடுக்கும் என சான்றிட்டதாகவும், விதை நன்கு சோதனை செய்யப்பட்டது என விளம்பரப்படுத்தியதை நம்பியும் அவர்களது விதை 1-வது எதிர்தரப்பினர் விற்பனை ஏஜண்டாக செயல்படுவதை நம்பியும், 1-வது எதிர்தரப்பினர் கடையில் விதைகளை வாங்கினார். முறையீடுதாரருக்கு சொந்தமான கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், களையூர் கிராம சர்வே எண்.429-ல் 5 ஏக்கரில் பயிரிட ஒரு ஏக்கருக்கு 45 கிலோ விதை வீதம் மொத்தம் 225 கிலோ விதை நெல் 9 சிப்பமாக வாங்கினார். ஒரு சிப்பம் ரூ.550- என ரூ.4950/- செலுத்தி விதை வாங்கினார். ரசீது எண்.330, நாள் 04-01-09 ஆகும்.

2. 1-வது எதிர்தரப்பினரிடம் வாங்கிய விதை நெல்லை 10-01-09 அன்று முறையீடுதாரருக்கு சொந்தமான நிலத்தில் விதைத்தார். சாதாரணமாக 90 நாட்களில் நெல் கதிர் உண்டாகும். ஆனால், மேற்படி நிலத்தில் பயிரிடப்பட்ட விதை நெல் முளைப்பு தன்மை குறைவாகவும் சில விதை மட்டும் அதிகமாக வளர்ந்தும் வித்தியாசமாக காணப்பட்டது.

3. முறையீடுதாரர், நெல் அறுவடைக்கு தயாராக இருக்கும் என எதிர்பார்த்தும் தயாராக இல்லாததால் முறையீடுதாரர் ரூ.4,950/-க்கு நெல் விதை வாங்கிய வகையிலும், ரூ.35,000/- விவசாயத்திற்கு கூலி ஆட்கள், உரம் மற்றும் பராமரிப்பு செலவு ஏற்பட்டதால் 10-04-09 முறையீடுதாரர் அப்பகுதி வேளாண்மை அலுவலரிடம் நெற்பயிரை ஆய்வு செய்து அறிக்கை கோரினார். 14-04-09 அன்று முறையீட்டில் சம்பந்தப்பட்ட நிலத்தையும், பயிரையும் வேளாண்மை அதிகாரி பார்வையிட்டு அறிக்கை அளித்தார்கள்.

4. முறையீடுதாரர் 1,2 எதிர்தரப்பினர்களுக்கு 20-04-09 நாளிட்ட கடிதம் மூலம் எதிர்தரப்பினரின் தரமற்ற விதையால் முளைப்பு திறனின்றி ரூ.4,950/- நட்டம் அடைந்துள்ளதையும், இதர செலவினங்களால் ஏற்பட்ட நட்டத்தையும் விளக்கி பதிவுத் தபால் மூலம் கடிதம் அனுப்பினார். அதில் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யவும் கேட்டிருந்தார். 1-வது எதிர்தரப்பினர் & 2-வது எதிர்தரப்பினர் தபால்களை பெற்றுக்கொண்டனர். 2-வது எதிர்தரப்பினர் உற்பத்தி செய்த விதையை தான் விற்பனை செய்ததாகவும், விதையின் இதர அம்சங்கள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும் 1-வது பதில் அளித்தனர். 2-வது எதிர்தரப்பினர் முறையீடுதாரர் நிலத்தை பார்வையிட்டு தமது நிறுவனத்தின் மூலம் பதில் அளிப்பதாக கூறினார். 2-வது எதிர்தரப்பினர் தனது பதிலில் தாம் விற்பனை செய்த விதை நெல் தரமானது எனவும், நன்கு சோதித்துதான் விற்பனை செய்ததாகவும் தெரிவித்து நட்டஈடு தர மறுத்துவிட்டார்.

5. முறையீடுதாரர் 25 ஆண்டுகளாக விவசாய தொழில் செய்பவர். அரசின் விவசாய அட்டையும் வைத்துள்ளார். எதிர்தரப்பினர் விதை நெல் தரமற்றது எனவும், முளைப்பு தன்மை இல்லாததையும் குறித்து 14-04-09 அன்று பார்வையிட்ட வேளாண்மை அலுவலர் சான்றும் அளித்துள்ளார். எனவே எதிர்தரப்பினர்கள் முறையீட்டாளருக்கு விதை நெல் வாங்கிய வகையில் ரூ.4,950/-ம், விதை நாற்றுவிட்டு, நட்டு பராமரித்து ஏற்பட்ட செலவு ரூ.35,000/-ம் விதை நாற்று விளைந்திருந்தால் ரூ.52,000/- அறுவடைத்தொகை கிடைக்க வேண்டியது நட்டமாக போனதால் இத்தொகை நட்ட ஈடாகவும், குடும்பத்தில் உள்ளவர்களாலும் இதர விவசாயிகளாலும் ஏளனமாக முறையீடுதாரரை பேசியதால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ரூ.20,000/-ம், வழக்கு செலவுக்கு ரூ.2000,-ம் எதிர்மனுதாரர்கள் வழங்க உத்திரவிட இந்த முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது.

6. இம்முறையீட்டுக்கான கட்டணமாக போஸ்டல் ஆர்டர் எண். . . . . . நாள் . . . .. . . .. . . மூலம் ரூ.100/-க்கான தொகை இணைக்கப்படுகிறது.

V. <u>கால அளவு</u>

04-01-09 அன்று விதை வாங்கியதிலிருந்து நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 24(A)-ன்படி 2 வருடத்திற்குள் இந்த முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது.

VI. <u>ஆள்வரை</u>

1-வது எதிர்தரப்பினர் கடையும், கடலூர் மாவட்டத்தில் விதை பயிரிட்டதால் இந்த முறையீடு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 11-ன் கீழ் கடலூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற எல்லையில் அமைந்திருப்பதால் கனம் மன்றத்தில் முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது.

VII. <u>கோரிக்கை & பரிகாரங்கள்</u>.

1. அ) முறையீடுதாரர் எதிர்தரப்பினரிடம் ரசீது எண்.330, நாள் 04-01-09-ன்படி ரூ.4,950/- செலுத்தி வாங்கிய நெல் தரமற்றதானதால் தொகையை எதிர்தரப்பினர்கள் முறையீடுதாரருக்கு திருப்பி அளிக்கவும்,

ஆ) முறையீடுதாரர் செலவு செய்த விவசாய தொழிலாளர் சம்பளம், நிலம் சீர்படுத்த, பராமரிப்பு, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து செலவு என மொத்தம் ரூ.35,000/-ம் ஈடாகவும் முறையீடுதாரருக்கு எதிர்தரப்பினர்கள் அளிக்கவும்,

இ) முறையீடுதாரருக்கு விவசாயத்தின் மூலம் கிடைக்க வேண்டிய அறுவடைத்தொகை ரூ.50,000/-ம் எதிர்தரப்பினர்கள் தரமற்ற விதையால் கிடைக்காமல் நட்டம் ஏற்பட்டமையால் முறையீடுதாரருக்கு எதிர்தரப்பினர் அளிக்கவும்,

ஈ) முறையீடுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ரூ.20,000/-மும் நட்ட ஈடாகவும் எதிர்தரப்பினர்கள் முறையீடுதாரருக்கு அளிக்கவும்,

2. வழக்கு செலவுக்காக ரூ.2000/-ம் எதிர்தரப்பினர்கள் முறையீடுதாரருக்கு அளிக்கவும்,

இக்குறைதீர்மன்றம் சரியென கருதுகிற இதர பரிகாரங்கள் வழங்கி உத்திரவிடவும் புகார்தாரர் பிரார்த்திக்கிறார்.

முறையீடுதாரர்

மேலே சொல்லப்பட்ட அம்சங்கள் யாவும் உண்மை எனவும் எனக்கு நன்கு தெரிந்தவை எனவும் உறுதி கூறுகின்றேன்.

இடம் : முறையீடுதாரர்
நாள் :

<u>ஆவணங்கள் பட்டியல்</u>

1. 04-01-09 அன்று நெல் விதை வாங்கிய ரசீது.
2. 14-04-09 அன்று வேளாண்மை அதிகாரி ஆய்வு செய்தஅறிக்கை
3. முறையீடுதாரர் 1,2 எதிர்தரப்பினருக்கு 20-04-09 அனுப்பிய கடிதம்.
4. 1-ம் எதிர்தரப்பினர் 30-04-09 நாளிட்ட பதில்.

முறையீடுதாரர்

<u>கமிஷன் அமைக்கக்கோரும் மாதிரி மனு</u>

உயர்திரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் நுகர்வோர் இதர மனு 2009

IN

C.C. /2009

எஸ்.தெய்வகுரு .. மனுதாரர்/புகார்தாரர்

-எதிர்-

1.ராசிவாம் அக்ரோ .. எதிர்மனுதாரர்
விற்பனை நிலையம் எதிர்தரப்பினர்
மற்றும் ஒருவர்.

# மாதிரி பிரமாண வாக்குமூலம்

எஸ்.தெய்வகுரு, இந்தியன், இந்து வயது 46, த/பெ.சிவலிங்கம், மெயின் ரோடு, களையூர் கிராமம், கடலூர் தாலுக்கா, ஆகிய நான் பிரமாணத்தின் பேரில் உறுதியாய் கூறுவதாவது.

1. நான் அசல் மனு 1/2009-ல் முறையீடுதாரர். இந்த மனுவில் மனுதாரர். எதிர்தரப்பினரிடம் வாங்கிய விதை நெல் தரமில்லாத காரணத்தால் எனக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டு உரிய இழப்பீட்டிற்காக மனுத்தாக்கல் செய்துள்ளேன்.

2. கனம் மன்றத்தில் எனது பக்க நியாயங்களை நிரூபிக்க அட்வகேட் கமி னரும், அவருக்கு உதவியாக வேளாண்மை அதிகாரி ஒருவரை இணை இயக்குநர் வேளாண்மைத் துறை மூலம் நியமித்து, எனது மனுவில் குறிப்பிட்டுள்ள நிலத்தையும், பயிரையும் ஆய்வு செய்து அறிக்கை பெற்றால் எனக்கு நியாயம் கிடைக்கும். அட்வகேட் கமி னரும், வேளாண்மை அலுவலரும் 1.நிலத்தில் விளைந்துள்ள நெல் பயிர் ரகம் குறித்து, (2) நிலத்தில் உள்ள பயிர் விளைச்சல் தன்மை குறித்து (3) 5 ஏக்கரில் விளைந்துள்ள நெல் (4) தற்போதுள்ள பயிர் எந்த காரணத்துக்காக பாதிப்பு ஏற்பட்டுள்ளது, (5) தேவைப்பட்டால் மனுதாரரின் அருகாமையில் உள்ள நிலத்தின் உரிமையாளர் சாட்சியம், (6) நன்றாக விளைந்திருந்தால் அதன் மதிப்பு குறித்தும் கடலூர் தாலுக்கா, களையூர் கிராம சர்வே எண்.429/-ல் 5 ஏக்கரில் நிலத்தில் உள்ள நெல் பயிரை ஆய்வு மதிப்பு குறித்தும் அறிக்கை பெற்றால் எனது தரப்பை நிரூபிக்க ஏதுவாக இருக்கும்.

3. கனம் மன்றம் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களை ஏற்று எனது நியாயமான அம்சங்களை கனம் மன்றத்தில் நிரூபிக்க மனுவை அனுமதித்து அறிக்கை சமர்பிக்க உத்திரவிட பிரார்த்திக்கின்றேன்.

மேலே கண்ட அம்சங்கள் யாவும் மனுதாரர்
உண்மை என்றும் கடலூரில் என்
முன்பாக (தேதி) -ல் கையொப்பம்
செய்தார் என் முன்பாக

வழக்கறிஞர்.

உயர்திரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் மாவட்டம்

நுகர்வோர் இதர மனு. /2009

in

C.C. /2009

எஸ்.தெய்வகுரு .. மனுதாரர்/ புகார்தாரர்

-எதிர்-

1. ராசிவாம் அக்ரோ விற்பனை நிலையம் .. எதிர்மனுதாரர்

2. எம்,எஸ்.மான்சென் விதை உற்பத்தி நிறுவனம் எதிர்தரப்பினர்

மனுதாரர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 13-ன் (4)(V) படி கமிஷன் அமைக்க கோரும் மனு

இத்துடன் இணைத்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் காரணங்களுக்காக அட்வகேட் கமி னரும், அவருக்கு உதவியாக வேளாண்துறை அலுவலர் ஒருவரையும் நியமித்து உத்திரவிட பிரார்த்திக்கின்றார்.

நாள் மனுதாரர்

## சோதனைக்கு உத்திரவிட மாதிரி மனு

உயர்திரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர்

நுகர்வோர் இதர மனு 2009

IN

C.C. /2009

எஸ்.தெய்வகுரு - மனுதாரர் - முறையீடுதாரர்

-எதிர்-

1. ராசிவாம் அக்ரோ விற்பனை நிலையம் .. எதிர்தரப்பினர்

2. எம்,எஸ்.மான்செ‌ன் விதை உற்பத்தி எதிர்மனுதாரர் நிறுவனம்

### பிரமாண வாக்குமூலம்

எஸ்.தெய்வகுரு, இந்தியன், இந்து வயது 46, த/பெ.சிவலிங்கம்,மெயின் ரோடு, களையூர் கிராமம், கடலூர் தாலுக்காக, ஆகிய நான் பிரமாணத்தின் பேரில் உறுதியாய் கூறுவதாவது.

நான் அசல் மனு 1/2009-ல் முறையீடுதாரர். இந்த மனுவில் மனுதாரர். எதிர்தரப்பினரிடம் வாங்கிய விதை நெல் தரமில்லாத காரணத்தால் எனக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டு உரிய இழப்பீட்டிற்காக மனுத்தாக்கல் செய்துள்ளேன்.

கனம் மன்றத்தில் எனது பக்க நியாயங்களை நிரூபிக்க நான் வாங்கிய விதை நெல்லில் சேமித்து வைத்துள்ள விதை நெல்லை சோதனை கூடத்தின் மூலம் ஆய்வு செய்து அறிக்கை பெற்றால் எனக்கு நியாயம் கிடைக்கும். மேற்படி அறிக்கை பெற்றால் எனது தரப்பை நிரூபிக்க ஏதுவாக இருக்கும்.

எனது நிலமான கடலூர் தாலுக்கா, களையூர் கிராமத்தில் சர்வே எண்.429-ல் 5 ஏக்கர் பயிரிட்ட விதை நெல் மாதிரியை கனம் மன்றத்தின் மூலம் சோதனை கூடத்திற்கு அனுப்பி எனது பக்க நியாயங்களை நிரூபிஈப் -பயன்படுத்தாமல் உள்ள நெல் விதையை உரிய சோதனை கூடத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றிட பிரார்த்திக்கிறேன்.

எனவே, கனம் மன்றம், மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களை ஏற்று எனது நியாயமான அம்சங்களை கனம் மன்றத்தில் நிரூபிக்க மனுவை அனுமதித்து மாதிரி விதைகளை உரிய சோதனை கூடத்திற்கு அனுப்பி அறிக்கை பெற உத்திரவிட பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| மேலே கண்ட அம்சங்கள் | மனுதாரர் |
| யாவும் உண்மை என்றும் | |
| கடலூரில் என் முன்பாக | |
| (தேதி) - ல் கையொப்பம் | என் முன்பாக |
| செய்தார் | வழக்கறிஞர். |

உயர்திரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர்

நுகர்வோர் இதர மனு. /2009

IN

C.C. /2009

எஸ்.தெய்வகுரு .. மனுதாரர்- முறையீடுதாரர்

-எதிர்-

1. ராசிவாம் அக்ரோ விற்பனை நிலையம் .. எதிர்தரப்பினர்

2. எம்,எஸ்.மான்சென் விதை உற்பத்தி நிறுவனம் எதிர்மனுதாரர்

மனுதாரர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 13(இ)-ன் படி மாதிரியை சோதனைக்கு கூடத்திற்கு அனுப்ப கோரும் மனு

இத்துடன் இணைத்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் காரணங்களுக்காக மாதிரி விதை நெல்லை உரிய சோதனை கூடத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றிட மனுதாரர் பிரார்த்திக்கின்றார்.

மனுதாரர்

<u>இணைப்பு ::</u>

முத்திரையிடப்பட்ட மாதிரி விதைகள் 3 பொட்டலங்கள்.

*****

<u>விவசாயம் சார்ந்த நுகர்வோர் குறைதீர் மன்ற தீர்ப்புகள்</u>

## 1. பயிர் இன்சூரன்ஸ் <u>IV (2006) CPJ 313 (NC)</u>

### பிரச்சனையின் சுருக்கம் :

புகார்தாரர் ஒரு விவசாயி. அவர் உருளைக்கிழங்கு தன்னுடைய நிலத்தில் பயிர் செய்தார். மேலும் பயிர் காப்பீடும் செய்தார். அதற்கு பிரிமியம் தொகையாக ரூ.1,291/- செலுத்தி யிருந்தார். பயிர் காலத்தில் பயிர்கள் நாசமடைந்துவிட்டது.

எனவே காப்பீடு திட்டத்தின் கீழ் காப்பீடுதொகை கேட்டு கீழ்கண்ட ஆவணங்களுடன் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் விவசாயி வழக்கு தொடர்ந்தார்.



இன்சூரன்ஸ் கம்பெனி விவசாயி அந்த காலக்கட்டத்தில் உருளைக் கிழங்கே பயிரடவில்லை என வாதம் செய்தனர். விவசாயி தன்னுடைய கட்சிக்கு ஆதரவாக RIC காப்பி, கிராம கணக்கு பிள்ளையின் சான்றிதழ், இன்சூரன்ஸ் பிரீமியம் செலுத்திய ரசீது ஆகியவைகளை தாக்கல் செய்தார்.

ஆதலால் தனக்கு காப்பீடு தொகை ரூ.5000/- வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்தாார்.

இன்சூரன்ஸ் கம்பெனி விவசாய நிதி கார்ப்பரேஷன் மூலமாக ஒரு விசாரணை மேற்கொண்டதாகவும் அதில் விவசாயி உருளைகிழங்கு பயிரிடவில்லை என்றும் அறிக்கை இருப்பதாக தெரிவித்தார். ஆனால் மாவட்ட குறைதீர் மன்றம் இன்சூரன்ஸ் கம்பெனி தாக்கல் செய்த ஆவணத்தைவிட, விவசாயி தாக்கல் செய்த கிராம ஆவணங்கள் மேலானது என தீர்ப்பளித்தது.

ஆகவே புகார்தாரரான விவசாயி இன்சூரன்ஸ் தொகை பெற தகுதியானவர் என தீர்ப்பளித்தது.

### முதல் மேல் முறையீடு :

மாவட்ட குறைதீர்மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இன்சூரன்ஸ் கம்பெனி மேல்முறையீடு செய்தது. கம்பெனி தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடியானது. இதை எதிர்த்து.

## 2–ம் மேல் முறையீடு :

மாநில குறைதீர் ஆணையத்தின் உத்திரவை எதிர்த்து இன்சூரன்ஸ் கம்பெனி 2-ம் மேல்முறையீடு தேசிய நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையத்தில் தாக்கல் செய்தது.

## எழுவினா :

1. கிராம ஆவணங்களின் நம்பகத்தன்மை என்ன?

2. விவசாய நிதி கார்ப்பரேஷனின் விசாரணையை ஏற்றுக் கொள்ளலாமா?

3. இத்தகைய நேரத்தில் வேறு என்ன செய்யலாம்?

## தீர்ப்புரை :

விவசாயி நிதி கார்ப்பரேஷன் அளித்த விசாரணை அறிக்கை என்பது பிரச்சினை எழுந்தபோது ஏற்பட்டதாகும். ஆனால் இன்சூரன்ஸ் என்பது பயிரிடத் தொடங்கும்போது செய்யப்பட்டதாகும். தவிரவும் அவ்விசாரணை அறிக்கை கிராமத்தில் பராமரிக்கப்படும் வருவாய்த்துறை ஆவணங்களை இல்லாத தன்மையாக்கிவிடாது.

ஏனெனில் பயிர் நடவடிக்கை தொடர்ந்தவுடன் கிராம (அடங்கல்) பதிவேடுகளில் சாகுபடி பயிர் என்கிற தலைப்பில் பயிர்கள் குறித்த விபரங்கள் உருளைகிழங்கு என பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே அதன் நம்பகத்தன்மையை கைவிடுவதற்கில்லை.

இந்நீதிமன்றம் மேலும் பரிந்துரைப்பதாவது

1. பயிர் காப்பீடு குறித்து கிராம கணக்கு பிள்ளைகளுக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

2. இன்சூரன்ஸ் கம்பெனிகள் மற்றும் வங்கிகள் அலுவலர்களுக்கு பயிர் இன்சூரன்ஸ் குறித்து விவசாயிகளிடம் தகவல் திரட்டுவதில் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

3. தவறான தகவலின் அடிப்படையில் காப்பீடு கோருபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. வங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், ரெவின்யூ அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் மத்தியில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தவேண்டும்.

* * * *

2. வீரியமற்ற விதைகள் <u>II (2007)CPJ 369(NC)</u>



பிரச்சனையின் சுருக்கம் :

1.5 ஏக்கரில் கரும்பு விளைவித்து சர்க்கரை ஆலைக்கு அனுப்ப ஒப்பந்தம் ஒன்றை மனுதாரர் மேற்கொண்டார். அதற்காக ஆலை நிர்வாகத்திடமிருந்து கடன் வசதியும் பெற்றார். ஆலையும் அவருக்கு நல்ல விதைகள், உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கின. கரும்பு வளர்ந்த பிறகு அறுவடை செய்ய புகார்தாரா; கரும்பு ஆலையை அணுகினார். பலமுறை அணுகியும் கரும்பு வெட்டும் உத்திரவு வழங்க தாமதித்து வந்தனர். வேறு வழியின்றி புகார்தாரர் ஒரு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார். ஆனாலும் பலனில்லை. இந்நிலையில் சார் இறங்கி கரும்பு தக்கை பாய்ந்தது. ஆகவே புகார்தாரர் இந்த வழக்கை தொடர்ந்தார்.

சர்க்கரை ஆலை நிர்வாகம் பதில் தாக்கல் செய்தது. அதாகிலும் புகார்தாரர் 2.50 ஏக்கர் கரும்பு விளைவிப்பதற்கு பதிலாக 1.50 ஏக்கர் கரும்பு பயிர் செய்துள்ளதாகவும், இருப்பினும் தபால் மூலமாகவும், அவரின் உறவினர் மூலமாகவும் வெட்டு உத்திரவு அனுப்பியதாகவும் அதை வாங்காமலிருந்துவிட்டு தான் ஆலையிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்தாமலிருக்க மறைமுகமான முயற்சியே இந்த வழக்கு என்றும், ஆகையால் புகார்தாரர் தனக்கு ரூ.15,000/- நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்றும் செலவு தொகை வழங்க வேண்டும் என்றும் புகார்தாரர் நுகர்வோர் கிடையாது என்றும் தெரிவித்தனர்.

மாவட்ட நீதிமன்றம் புகார்தாரர் ஒரு நுகர்வோர் என்றும் அவர் பட்ட நட்டத்திற்கு வாங்கிய கடன் வசூலிக்கப்படக் கூடாது என்றும், மீதம் ரூ.10,000/- புகார்தாரர் நிர்வாகம் வழங்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

## மேல் முறையீடு :

தீர்ப்பை எதிர்த்து ஆலை நிர்வாகம் மேல்முறையீடு செய்தது. நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு ஆள்வரை இல்லையென்றும், இருதரப்பினர் செய்துகொண்ட ஒப்பந்தம் இருப்பதாலும் உரிமையியல் நீதிமன்றம் தான் தலையிடலாம் என்று காரணம் சொன்னார்கள்.

## எழுவினா

1. நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் இப்பிரச்சினையை தலையீடு செய்ய இயலுமா?

2. என்றால் குறைபாடு உள்ள சேவை உள்ளதா?

3. வேறு என்ன பரிகாரம் மேல்முறையீட்டாளர் அடைய தகுதியுடையவரா?

## தீர்ப்புரை

### 1) ஆள்வரை

இருதரப்பினருக்குள் ஒப்பந்தம் இருந்தாலும் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் ஆள்வரையை எதிர்க்கவில்லை. அது தவிரவும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்பது அமலில் உள்ள இதர சட்டங்களுக்கு எதிரானது அல்ல. அது தடையாக செல்லக்கூடியது மற்றும் துரிதமாக செல்லக்கூடியது.

எனவே ஒப்பந்தம் இருப்பதால் இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லையென்று கூறமுடியாது. மேலும் ஆலை நிர்வாகம் வெட்டு உத்திரவு அனுப்பியதற்கோ அல்லது அவரது உறவினர் மூலம் அனுப்பியதற்கோ ஆதாரம் காட்டப்படவில்லை.

ஆகவே குறைபாடுள்ள சேவையை செய்தார்கள் என்ற மாவட்ட குறைதீர் மன்றத்தின் தீர்ப்பில் தலையீடு செய்ய முடியாது என தீர்ப்பளிக்க முடியாது.

* * * *

## 3. விதை நாற்று சரியில்லை : 1 (2006) CPJ 125

பிரச்சனையின் சுருக்கம் :

விவசாயி எதிர்தரப்பினரிடம் 100 எண்ணிக்கை வெனிலா நாற்று வாங்கினார். ஒரு வெனிலா நாற்றின் விலை ரூ.67/- எதிர்தரப்பினர் சரியில்லாத நாற்றுகளை மாற்றித்தரவும் ஒப்புக்கொண்டனர். அது தவிர பயிர்களை அவ்வப்போது பார்வையிடவும் ஒப்புக்கொண்டனர். நாற்று நட்டபிறகு முறைப்படி தண்ணீர் விட்டுவந்தனர். ஆனாலும் சில நாற்றுகள் சரியான வளர்ச்சியடையவில்லை.

எதிர்தரப்பினர் சித்திரதுர்க்கா மாவட்ட மன்றத்திற்கு ஆள்வரவில்லை என்றும் மேலும் ஒப்பந்த ஷரத்துக்களின்படி தங்களுக்கு எந்த நஷ்டஈடும் வழங்க தேவையில்லை தெரிவித்தனர்.

ஆனால் மாவட்ட நீதிமன்றம் சித்திரதுர்க்கா மாவட்ட நீதிமன்றத்திற்கு ஆள்வரை உண்டு என்றும் ஏற்றுக்கொண்டபடி வேறு நாற்றுகள் வழங்காததினாலும் மேற்பார்வை இடாததாலும் தோட்ட நிலம் என்று விவசாயியின் நிலம் பாகுபாடு செய்யப்பட்டிருப்பதாலும் பழமரங்கள் தென்னை மரங்கள் அந்த நிலத்தில் வளர்ந்திருப்பதாலும் மனு அனுமதிக்கப்பட்டு இழப்பீடு தொகை வழங்க ஆணை இடப்பட்டுள்ளது.



முதல் மேல் முறையீடு :

மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து நாற்று வியாபாரிகள் மேல் முறையீடு செய்தனர்.

எழுவினா :

தரப்பினரிடையே ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதால் இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லையா? இழப்பீடு தொகை அதிகமா?

தீர்ப்புரை :

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்ற சட்டங்களை போல் இருதரப்பினர் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு ஆள்வரையை மாற்றிக்கொள்ள முடியாது. தவிரவும் நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் ஒரு உரிமையியல் நீதிமன்றமாக கருதி செயல்படமுடியாது.

எனவே ஆள்வரைவு பொறுத்த மட்டில் தரப்பினர்கள் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட காரணத்தினால் ஆள்வரையை மாற்றியமைக்க முடியாது.

ஒரு விவசாயி பாதிக்கப்பட்டால் அது தொடர்பான பாதிப்புகளை குடும்பத்தில், சமூகத்தில் ஏற்படுத்தும்.

எனவே விவசாயி மன உளைச்சளுக்காக வழங்கப்பட்ட தொகை சரியானதே.

* * * *

# கிராம ஊராட்சியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்



கிராமசபை என்பது சிற்றுராட்சியுடன் இணைந்து இயங்கக்கூடிய ஒரு அமைப்பு ஆகும். இதன் அதிகாரமும், செயல்பாட்டுத் திறனும் கிராம பஞ்சாயத்துடன் இணைந்ததாகும்.இப்பஞ்சாயத்தின் விவசாயம் சார்ந்த அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்து விவசாயிகள் தெரிந்துகொள்வது அவசியம்.

- கிராம சொத்துக்களை பராமரித்தல்.
- கிராம சாலைகள், சிறுபாலங்கள், தரைப்பாலங்கள் அமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல், பேணிக்காத்தல்.
- தெரு விளக்கு பராமரிப்பு மற்றும் குடிநீர்வழங்கல், கிணறு வெட்டுதல்
- கிராம நத்தங்களை விரிவுபடுத்துதல், கட்டிடங்களை ஒழுங்குமுறை செய்தல்.
- கிராம அளவில் நிறைவேற்றப்படும் மத்திய மாநில அரசு திட்டங்களை கண்காணித்தல், மேற்பார்வையிடல்.

## ஊராட்சியின் அதிகார பணிகள்

விவசாயம், விவசாயம் சார்ந்த பணிகள் பெருக்கம்

நில விநியோகம், நிலம் மேம்பாடு, மண்வள பாதுகாப்பு மற்றும் நீர் பிடிப்பு மேம்பாடு

சிறு பாசனம் மற்றும் நீர் மேலாண்மை

கால்நடை பராமரிப்பு பால் பண்ணை மற்றும் கோழிப்பண்ணை மீன் வளம் பாதுகாத்தல்.

சமுகக்காடுகள் பண்ணை காடுகள் வளர்த்தல்

உணவை பதப்படுத்தும் தொழில்கள் மற்றும் பிற தொழில்கள்

மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை வளர்த்தெடுத்தல்

சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் நடத்துதல்

விவசாயிகளுக்கு கிராம ஊராட்சிகளின் பணி : ஒப்பபடைக்கப்பட்ட புறம்போக்குகள்- ஒதுக்கப்படாத காடுகள் - பாசனத்திற்கு பயன்படாத நீர் நிலைகள் (குளம், குட்டைகள், கேணிகள் ஊற்றுகள் அவற்றை சார்ந்த இடங்கள் (ஆறுகள், ஓடைகள், மடுக்கல், கால்வாய்களை தவிர்த்து)

மேய்ச்சல் தரைகள், களத்து மேடுகள், மந்தைவெளிகள், வண்டிப்பாட்டைகள் என்பவை விவசாயிகளுக்கு பெரிதும் பயன்படும் அரசு புறம்போக்குகளாகும். இவற்றை பயன் பாட்டிற்கு கொண்டு வருவது விவசாயிகளின் கடமையாகும்.

*********




## தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005

எந்த இந்திய குடிமகனும் மத்திய/மாநில அரசு அலுவலகத்தில் அல்லது பொதுத்துறை நிறுவனத்தில் அல்லது சட்டத்தால் இயற்றப்பட்ட நிறுவனத்தால் அல்லது அரசால் வெகுவாக நிதி அளிக்கப்படும் நிறுவனத்தில்

ரூ.10/- கட்டணம் கோர்ட் முத்திரையாகவோ /காசோலையாகவோ/ ரொக்கமாக செலுத்தி எந்த தகவலையும் எழுத்து பூர்வமாக கேட்டு பெறலாம்

மாதிரி கேட்கலாம் / அலுவலகத்தில் சென்று ஆவணங்களை பார்வையிடலாம்

வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு கட்டணம் கிடையாது

அதற்கென்று ஒவ்வொரு நிறுவனத்திலும் உதவி பொது தகவல் அதிகாரி மற்றும் பொது தகவல் அதிகாரி நியமிக்கப்பட்டு விட்டனர்.

தகவல் 30 நாட்களுக்குள் வழங்கப்படவேண்டும்.

வேறு நிறுவனத்திற்குரிய மனு, தன் நிறுவனத்திற்கு வந்தால் அதை உரிய நிறுவனத்திற்கு 5 நாட்களுக்குள் மாற்ற வேண்டும். அத்தகவலை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

3-ம் நபர் குறித்த தகவலை கொடுக்க மேலும் 10 நாட்கள் அவகாசம் உண்டு. முதல் மேல்முறையீட்டை 30 நாட்களுக்குள் அதே துறையில் நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் தாக்கல் செய்யலாம்.

2-ம் மேல்முறையீட்டை மாநில / மத்திய தகவல் ஆணையத்திடம் 90 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும்.

தகவல் அளிக்க மறுத்தால் / குறையுள்ள தகவலை அளித்தால் / காலதாமதமாக அளித்தால் தகவல் ஆணையம், தகவல் அளிக்க மறுத்தவர்க்கும், தெவறான தகவல் அளித்தவருக்கும் அபராதம் (நாளொன்றுக்கு ரூ.250/- முதல் அதிகபட்சம் ரூ.25,000/- வரை) அபராதம் விதிக்கும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷடஈடு வழங்க உத்தரவிடும் / ஒழுங்கு நடவடிக்கைக்கும் உத்தரவிடும்.

கட்டணம் இல்லாமல் தகவல் அளிக்க உத்திரவிடும்

மற்ற சட்டங்களை விட இந்த சட்டம் மேலோங்கி நிற்கும்.

இச்சட்டத்தை பயன்படுத்த முகவரிகள்

உதவி பொதுத் தகவல் அதிகாரி / பொதுத் தகவல் அதிகாரி

சம்பந்தப்பட்ட அலுவலகத்தின் பெயர் மற்றும் விலாசம்

முதல் மேல்முறையீட்டு அதிகாரி

(மேல்முறையீட்டு அதிகாரி

சம்மந்தப்பட்ட துறை மற்றும் விலாசம்.

2-ம் மேல்முறையீட்டு அதிகாரி

மற்றும் புகார்கள் தெரிவிக்கப்படவேண்டிய அதிகாரி

தமிழ்நாடு தகவல் ஆணையம்,
(காமதேனு கோ-ஆப் சூப்பர் மார்க்கெட்டிங்
முதல் தளம், வானவில் அருகில், ப.எண்.273/378,
அண்ணா சாலை,
சென்னை-18
போன் 044-24357581
பேக்ஸ் 044-24335758

## LIST OF PESTICIDES \ PESTICIDE FORMULATIONS BANNED FOR MANUFACTURE IMPORT AND USE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Aldicarb | 2. | Aldrin | 3. | Benzene hexachloride |
| 4. | Calcium cyanide | 5. | Carbofuron 50% sp | 6. | Cj;prdame |
| 7. | Copper aceto arsenite | 8. | Dibromo chloropropane | 9. | Edrin |
| 10. | Ethyl mercury chloride | 11. | Ethyl parathion | 12. | Heptachlor |
| 13. | Menazone | 14. | Methomyl 12.5% L | 15. | Methomyl 2.4% L |
| 16. | Pentachloro Phenol | 20. | Phosphomidon 85% L | 21. | Sodium Methane Arsonate |
| 22. | Tetradifon | 23. | Toxafene | | |

b. **Pesticide formulations Banned for use**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Captafol 80% powder | 2. | Chlorobenzilate | 3. | Dieldrine |
| 4. | Ethylene Dibromide | 5. | Maleic Hydrazide | 6. | Nicotin sulphate |
| 7. | Phenyl Mercury Acetate | 8. | Trichloro Acetic Acid(TCA) | | |

c. **Pesticides Restricted for use.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Aluminium phospide | 2. | DDT | 3. | Lindane |
| 4. | Methyl Bromide | 5. | Methyl parathion | 7. | Sodium Cyanide |
| 6. | Methoxy Ethyl Mercuric Choloride(MEMC) | | | 8. | Monocrotophos (banned for vegetables) |

# தமிழ்நாட்டில் உள்ள அக்மார்க் தர பரிசோதனை ஆய்வகங்கள் உள்ள இடம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை (வடக்கு) | 2. | சென்னை(தெற்கு) | 3. | வேலூர் |
| 4. | பண்ருட்டி | 5. | தஞ்சாவூர் | 6. | சேலம் |
| 7. | தர்மபுரி | 8. | திருச்சி-1 | 9. | திருச்சி-2 |
| 10. | கரூர் | 11. | ஈரோடு-1 | 12. | ஈரோடு-2 |
| 13. | பெருந்துரை | 14. | சித்தோடு | 15. | காங்கேயம்- 1 |
| 16. | காங்கேயம்-2 | 17. | வெள்ளைகோட்டை | 18. | கோயம்புத்துார் |
| 19. | பல்லடம் | 20. | திருப்பூர் | 21. | மதுரை(தெற்கு) |
| 22. | மதுரை-வடக்கு | 23. | தேனி | 24. | திண்டுக்கல் |
| 25. | விருதுநகர் | 26. | திருநெல்வேலி | 27. | தென்காசி |
| 28. | துாத்துக்குடி | 29. | நாகர்கோவில் | 30. | மார்த்தான்டம் |

## OIL TESTING LABS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Kancheepuram | 2. | Paramakudi | 3. | Kovilpatti |
| 4. | Nagercoil | 5. | Trichy | 6. | Salem |
| 7. | Coimbatore | 8. | Dharmapuri | 9. | Cuddalore |
| 10. | Madurai | 11. | Melalathur | 12. | Aduthurai |
| 13. | Kudumianmalai | 14. | Erode | 15. | Tirunelveli |
| 16. | Theni | 17. | Dindigul | 18. | Sivaganga & 20. Ooty |

## MOBILE SOIL TESTING LABS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Thiruvarur | 2. | Krishnagiri | 3. | Kovilpatti |
| 4. | Paramagudi | 5. | Coimbatore | 6. | Karur |
| 7. | Perambalur | 8. | Thiruvarur | 9. | Aruppukottai |
| 10. | T.V.Malai | 11. | Madurai | 12. | Villupuram |
| 13. | Namakkal | 14. | Nagarcoil | 15. | Erode |
| 16. | Nagapattinam | | | | |

| PESTICIDE TESTING LABS | | SEED TESTING LABS | |
|---|---|---|---|
| 1. | Madurai | 1. | Madurai |
| 2. | Coimbatore | 2. | Coimbatore |
| 3. | Kovilpatti | 3. | Thanjavur |
| 4. | Salem | 4. | Dharmapuri |
| 5. | Trichy | 5. | Tirunelveli |
| 6. | Aduthurai | 6. | Trichy |
| 7. | Kancheepuram | 7. | Kanchipuram |
| 8. | Cuddalore | 8. | Ooty |
| 9. | Erode | 9. | Salem |
| | | 10. | Erode |
| | | 11. | Villupuram |

| FARMERS TRAINING CENTRES | | FERTILISER TESTING LABS | |
|---|---|---|---|
| 1. | Kancheepuram | 1. | Coimbatore |
| 2. | Tindivanam | 2. | Madurai |
| 3. | Vellore | 3. | Trichy |
| 4. | Dharmapuri | 4. | Kovilpatti |
| 5. | Kudumianmalai | 5. | Paramagudi |
| 6. | Lalgudi | 6. | Kancheepuram |
| 7. | Sakkottai | 7. | Dindigul |
| 8. | Palayamkottai | 8. | Villupuram |
| 9. | Thirupathisaram | 9. | Salem |
| 10. | Paramagudi | 10. | Dharmapuri |
| 11. | Salem | 11. | Kumbakonam |
| 12. | Bhavani | 12. | Nagercoil |
| | | 13. | Ooty. |

# விவசாய சட்டத்தை பயன்படுத்த முகவரிகள்

Joint Secretary (Public Grievances)

Room No.242-A, Krish Bhavan, New Delhi-110001 Ph:011/23384468

Deputy Secretary ( GA & OXM) PG

Room No. 228, A. Krish Bhavan. New Delhi – 110001 Ph:011/23073102

Senior Analyst (WSU) Room No.445, KrishiBhavan. Delhi:110001 Ph:011/23389207.

*******

## மாவட்ட விவசாய அலுவலகங்கள் மற்றும் தொடர்பு எண்கள்

| | | | |
|---|---|---|---|
| நாமக்கல் | - | 04286-280465, | 04286-280827 |
| கிருஷ்ணகிரி | - | 04343-237363 | |
| ஈரோடு | - | 0424-2339101, | |
| | - | 0424-226809 | |
| திருச்சி | - | 0431-2420554, | |
| | - | 0431-2423464 | |
| கரூர் | - | 04324-257292, | 04324-255289 |
| புதுக்கோட்டை | - | 04322-22166, | 04322-228394 |
| பெரம்பலூர் | - | 04328-224270 | |
| நாகை | - | 04365-242351 | |
| திருவாரூர் | - | 0436-224150 | |
| மதுரை | - | 0452-2537153, | 0452-2529081 |
| திண்டுக்கல் | - | 0451-2461910 | |
| தேனி | - | 04546-251862 | |
| இராமநாதபுரம் | - | 04567-230387, | 04567-231312 |
| சிவகங்கை | - | 04575-240409 | |
| விருதுநகர் | - | 04562-252705, | 04562-252186 |
| நெல்லை | - | 0462-2572514, | 0462-2574017 |
| தூத்துக்குடி | - | 0461-2340678 | |
| கன்னியாக்குமரி | - | 04652-275391 | |
| நீலகிரி | - | 0423-2444056 | |
| காஞ்சீபுரம் | - | 044-27222400, | 044-27222977 |
| திருவள்ளூர் | - | 044-27662852, | 044-27665294 |
| கடலூர் | - | 04142-290658, | 04142-295878 |
| விழுப்புரம் | - | 04146-222291, | 04146-222625 |
| வேலூர் | - | 0416-2267315, | 0416-2252501 |
| திருவண்ணாமலை | - | 04175-233525, | 04175-233333 |
| தர்மபுரி | - | 04342-232225, | 04342-232226 |
| சேலம் | - | 0427-2451050, | 0427-2447347 |
| கோவை | - | 0422-2432739, | 0422-2453578 |

## ஆராய்ச்சி மையங்கள் மற்றும் தொடர்பு எண்கள்

<u>நெல்</u>

| | | |
|---|---|---|
| விருத்தாசலம் | - | 04143-260231 |
| ஆடுதுறை | - | 0435-2472098 |
| அம்பாசமுத்திரம் | - | 04634-250215 |
| திரூர்குப்பம்(சென்னை அருகில்) | - | 044-27620233 |

<u>கரும்பு</u>

| | | |
|---|---|---|
| கடலூர் | - | 04142-220630 |
| கோவை | - | 0422-2472621 |
| திருகமணி | - | 0431-2614417 |
| மேலாலத்தூர் | - | 04171-220275 |

<u>தோட்டக்கலை</u>

| | | |
|---|---|---|
| விஜயநகரம் (ஊட்டி) | - | 0423-244210 |
| ஏற்காடு | - | 04281-222456 |
| கொடைக்கானல் | - | 04542-240931 |

<u>மண் மற்றும் நீர்</u>

| | | |
|---|---|---|
| தஞ்சை | - | 04362-267680, 04362-267679, 04328-271722 |

# விவசாயிகள் கவனத்திற்கு

விவசாயத்தில் பெரும்பங்கு வகிப்பது தரமான இடுபொருட்கள் ஆகும். பல்வேறு பொருட்கள் இருந்தாலும் அடிப்படையாக முதலில் தேர்வு செய்யப்பட வேண்டிய இடுபொருள் விதை தான். தரமான விதையை விதைப்புக்கு தேர்ந்தெடுக்கும்போது விவசாயிகள் கீழ்க்கண்ட விவரங்களை கருத்திற்கொண்டு விதைகளை தேர்வு செய்ய வேண்டும்.

1. விதைகளை உரிமம் பெற்ற கடைகளில் பட்டியலுடன் வாங்குங்கள்.

2. விதைகளை வாங்கும்போது சான்றட்டை, விபர அட்டையில் உள்ள விபரங்களை சரி பாருங்கள். அதில் பயிர், இரகம், நிலை, குவியல் எண், கலாவதி நாள், இனத்துாய்மை, முளைப்புத் திறன், எந்தப் பருவம் மற்றும் எந்த பகுதிக்கு உகந்தது ஆகிய விவரங்கள் சரியாக உள்ளதா எனப் பாருங்கள்.

3. பெறப்படும் பட்டியலில் விதைகள் வாங்குபவரின் பெயர், விலாசம், தேதி, வாங்கிய விதையின் பெயர், இரகத்தின் பெயர், அளவு, விலை, குவியல் எண், காலாவதி நாள் மற்றும் வாங்குபவரின் கையொப்பம் இருத்தல் அவசியம்.

4. விதை கொள்கலனில் உள்ள விபரங்களும், விற்பனை பட்டியலில் உள்ள விபரமும் சரியாக உள்ளதா என பார்த்து விதை வாங்க வேண்டும்.

5. மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை வாங்கும் பொழுது கொள்கலனில் குறிப்பிடப்பட்டுள்ள இரகம் GEALயால் அங்கிகரிக்கப்பட்டுள்ளதா என சரிபார்த்து வாங்க வேண்டும்.

6. கொள்கலனில் ஏமாற்றம் அளிக்கும் தகவல் (Misleading Statement) ஏதும் இருக்கக்கூடாது, இதனை சரிபார்த்து வாங்கவேண்டும்.

இதைத் தவிர விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை விதைப்பதற்கு முன்பு தங்களுக்கு அருகில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் தங்களது விதைகளை பணி மாதிரிகளாகக் (Service Sample) கொடுத்து பரிசோதனை செய்தல் நல்லது. மேலும், இப்பரிசோதனை செய்வதற்கு ரூ.30 மட்டுமே. இவ்வாறு செய்வதால் சாகுபடிச் செலவை குறைக்கலாம்.

விவசாயப் பெருமக்களே விதைகள் சம்பந்தமான பிரச்சனைகள் இருந்தால் தங்களுக்கு அருகில் உள்ள விதைச் சான்று துறை அலுவலகங்களையோ அல்லது கீழ்க்கண்ட விலாசத்திலோ தொடர்புக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விதைச்சான்று இயக்குநர்,
1424 எ, தடாகம் ரோடு, ஜி. சி.டி அஞ்சல்,
கோயம்புத்துார் 641 013
தொலைபேசி 0422- 2432984 பேக்ஸ் : 0422- 2457554

## வாங்கிய விதைகளில் பிரச்சனைகள் இருந்தால் என்ன செய்வது?

விவசாயிகள் உரிமம் பெற்ற கடையில் வாங்கிய விதைகளை விதைப்பு செய்தபின் பிரச்சனைகள் ஏற்பட்டால் எழுத்து மூலம் தங்களது பகுதியில் உள்ள விதை ஆய்வாளர் அல்லது விதை ஆய்வு துணை இயக்குநரிடம் புகார் தரப்படவேண்டும். அவ்வாறு எழுத்து மூலம் புகார் கொடுக்கும்போது கீழ்க்கண்ட ஆவணங்கள் அல்லது பொருட்களுடன் கொடுக்க வேண்டும்.

1. விதைப்பு செய்தது போக மீதமுள்ள விதை

2. விதைகள் கொள்முதல் செய்தபோது பெறப்பட்ட விற்பனை பட்டியல், விதைப்பை, விதைப்பையில் இருந்த சான்றட்டை அல்லது விபர அட்டை ஆகியவற்றில் ஏதாவது ஒன்று புகாருடன் இணைக்கப்படவேண்டும்.

விவசாயிகளால் வழங்கப்படும் புகார் மனுவின் மீது விதைச்சட்ட நடைமுறைகள் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு நிறுவனத்தின் மீது தவறு இருப்பது தெரியவந்தால் நீதிமன்ற நடவடிக்கை தொடரப்படும்.

விதைகளில் பிரச்சனை இருந்தால் விவசாயிகள் தங்களது பகுதி விதை ஆய்வாளர் அல்லது விதை ஆய்வு துணை இயக்குநரிடம் எழுத்துமூலம் புகார் கொடுங்கள் அல்லது கீழக்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது

விதைச்சான்று இயக்குநர்,
1424 எ, தடாகம் ரோடு,
ஜி. சி.டி அஞ்சல்,
கோயம்புத்துார் 641 013
தொலை பேசி : 0422 - 2432984
பேக்ஸ் : 0422 - 2457554

## வேளாண்மை துறை இயக்குநர்கள் (விதை ஆய்வு) அலுவலக தொலைபேசி எண்கள்

| வ.எண். | வேளாண்மை துறை இயக்குநர்கள் (விதை ஆய்வு) தலைமையகம் | அலுவலகம் தொலைபேசி | கைபேசி |
|---|---|---|---|
| 1. | சென்னை | 044-28455542 | 93632 42891 |
| 2. | கோயம்புத்துார் | 0422-2438910 | 99943 63443 |
| 3. | தருமபுரி | - | 94425 48397 |
| 4. | ஈரோடு | 0424-2268009 | 99429 13513 |
| 5. | கரூர் | - | 94438 28439 |
| 6. | நாகப்பட்டினம் | - | 94431 11919 |
| 7. | இராமநாதபுரம் | 04567-230387 | 94437 21808 |
| 8. | சேலம் | 0427-2446131 | 99449 80431 |
| 9. | தஞ்சாவூர் | 04362-271722 | 94431 16882 |
| 10. | திருநெல்வேலி | 0462-2574017 | 94435 45250 |
| 11. | திருச்சிராப்பள்ளி | 0431-2420587 | 94438 55149 |
| 12. | வேலுார் | 0416-2264562 | 94872 64072 |
| 13. | விழுப்புரம் | - | 97899 97015 |
| 14. | விருதுநகர் | 04562-252705 | 94423 31697 |
| 15 | மதுரை | 04252-2529081 | 94438 32975 |

தமிழ்நாடு அரசு

## உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# மாநில நுகர்வோர் தொலைபேசி சேவை மையம்

### குடும்ப அட்டைதாரர் கவனத்திற்கு.......

- உங்களது குடும்ப அட்டைக்கு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து உணவுப் பொருட்களும் நிர்ணயிக்கப்பட்ட விலையில், உரிய தரத்தில், சரியான எடை அளவில் பெறுவதில் குறைகள் உள்ளதா ?
- உங்களது குடும்ப அட்டை இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடை விற்பனை நேரத்தில் சரியாக திறந்து மூடப்பட்டு செயல்படுவதில்லையா ? வேறு ஏதும் குறைகள் உள்ளதா ?
- குடும்ப அட்டைகள் புதிதாக பெறுவது அல்லது குடும்ப அட்டைகளில் விலாச மாற்றம் போன்ற உங்களுக்கு தேவையான மாற்றங்கள் செய்வது தொடர்பான வழிமுறைகள் குறித்து விளக்கம் தேவையா ?
- வட்ட வழங்கல் அலுவலகம் / உதவி ஆணையாளர் அலுவலக பணியாளர் உங்களுக்கு வழங்கும் சேவையில் குறைபாடு உள்ளதா ?

அணுகுவீர்

| | |
|---|---|
| தொலைபேசி எண் | **044-28592828** |
| தொலைபேசி சேவை உதவியாளரை தொடர்பு கொள்ளும் நேரம் | அனைத்து அரசு பணி நாட்களிலும் காலை 9-30 முதல் மாலை 6-00 முடிய |
| பொதுவிநியோகம் மற்றும் குடும்ப அட்டைகள் தொடர்பான முன்பதிவு செய்யப்பட்ட (IVRS) தகவல்கள் அறிய | வாரத்தின் அனைத்து நாட்களும் எந்நேரமும் (24 Hours x 7 Days) |
| மின்அஞ்சல் (இ.மெயில்) மூலம் புகார் அனுப்பிட | consumer@tn.gov.in |
| புகார் பதிவு செய்ய இணைய தள முகவரி | www.consumer.tn.gov.in |
| உங்கள் நியாய விலைக் கடையில் பொருட்கள் இருப்பு விவரம் செல்பேசியில் (SMS) வாயிலாக அறிய | PDS <SPACE> District Code <SPACE> Shop Code என டைப் செய்து 9789006492 அல்லது 9789005450 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி (SMS) அனுப்பவும் உதாரணம் : PDS 03 AB001 என குறுஞ்செய்தி (SMS) அனுப்பினால் 03-காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் வட்டத்தினை சார்ந்த AB001 என்ற நியாய விலைக் கடையில் பொருட்கள் இருப்பு விவரம் பெறலாம் - மாவட்ட குறியீடு மற்றும் கடை குறியீடு எண்கள் உங்கள் குடும்ப அட்டையின் முதல் பக்கத்தில் உள்ளது. |

வெளியீடு : தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம், (TANSSCOPE), எழிலகம், சென்னை - 5.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”

*திருவள்ளுவர்*



தொகுப்பு

**தமிழ்நாடு நுகர்வோர் கூட்டமைப்பு (CONFET)**

72, நேதாஜி ரோடு, கடலூர் - 607 001.
தொலைபேசி 04142 230978 & 220764
www.consumerwecan.org
e-mail: consumernizam@yahoo.co.in

Printed by Tamcos - 044-2848 500